# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

## கொள்கை விளக்கக் குறிப்பு
2023 - 2024

## மானியக் கோரிக்கை எண். 17

**ஆர். காந்தி**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

## கொள்கை விளக்க குறிப்பு 2023-2024


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | கைத்தறி துறை | 1-172 |
| 2. | துணிநூல் துறை | 173-261 |

# கைத்தறி துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | கைத்தறி துறை | 23 |
| 3. | திட்டங்கள் | 31 |
| 4. | சமூக பாதுகாப்புத் திட்டங்கள் | 49 |
| 5. | கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் | 61 |
| 6. | கைத்தறிகளின் மேம்பாட்டிற்கான சட்டங்கள் மற்றும் முத்திரைகள் | 93 |
| 7. | பயிற்சி | 106 |
| 8. | தகவல் தொழில்நுட்ப முனைப்புகள் | 112 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 9. | துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் | | 119 |
| | 9.1 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை | 119 |
| | 9.2 | தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம் | 153 |
| | 9.3 | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு | 158 |
| | 9.4 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், சென்னை | 164 |
| 10. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | | 167 |
| 11. | கைத்தறி துறையின் 2023–24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | | 169 |

# துணிநூல் துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | முன்னுரை | | 173 |
| 2 | துணிநூல் துறை | | 175 |
| 3 | தமிழ்நாடு – துணிநூல் மதிப்புத் தொடரின் பிரிவுகள் (Textile Value Chain) | | 181 |
| | 3.1 | இழை (Fibre) | 182 |
| | 3.2 | நூற்புப் பிரிவு | 188 |
| | 3.3 | நெசவு மற்றும் பின்னலாடை | 200 |
| | 3.4 | பதனிடும் பிரிவு | 202 |
| | 3.5 | ஆடை மற்றும் ஆயத்த ஆடை (Garment & Apparel) | 209 |
| | 3.6 | தொழில்நுட்ப ஜவுளிகள் | 211 |
| 4 | துணிநூல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | | 231 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 4.1 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம் (SITP) | 231 |
| | 4.2 | சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டம் | 233 |
| | 4.3 | பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆயத்த ஆடைப் பூங்காக்கள் (பி.எம்.மித்ரா) திட்டம் | 235 |
| | 4.4 | தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சிறப்பு திட்டம், மறுசுழற்சி முறையிலான செயற்கை இழை, செயற்கை இழை துணி மற்றும் ஆடைகள் உற்பத்தி (2023) | 238 |
| 5 | ஜவுளித் துறை மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள்/ முயற்சிகள் | | 241 |
| | 5.1 | தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (Technical Advisory Committee) | 241 |
| | 5.2 | ஜவுளி நகரம் (Textile City) | 243 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 5.3 | சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் "தமிழ்நாடு பெவிலியன்" அமைத்தல் | 245 |
| | 5.4 | உலகளாவிய நிகழ்வுகளில் பங்குபெறுதல் | 247 |
| | 5.5 | துணிநூல் துறைக்கான இணையதளத்தை உருவாக்குதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல் | 250 |
| 6 | தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையினை செறிவூட்டுதல் (Enrichment of Tamil Nadu New Integrated Textile Policy) | | 251 |
| 7 | முன்னோக்கிய பாதை (Way Forward) | | 253 |
| 8 | நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் | | 256 |
| 9 | 2023–2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | | 260 |

# கைத்தறி

## 1. முன்னுரை

### 1.1 கைத்தறித் தொழில்

இந்தியாவின் கைத்தறி தொழில் கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் கலையாகவும், காலங்களை கடந்த கலாச்சாரத்தின் நீண்ட பாரம்பரியத்தினை பிரதிபலிக்கும் தொழிலாகவும் விளங்கிவருகிறது. இந்திய நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் தங்களது கை நூற்பு, நுட்பமான நெசவு மற்றும் அச்சிடும் நேர்த்தி ஆகியவற்றில் உலக அளவில் தனித்தன்மையுடன் விளங்குகின்றனர். கைத்தறி தொழில், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உற்பத்தி செய்யும் ஒரு குடும்ப தொழிலாக உள்ளது.

நெசவுத் தொழில் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் பரவி வருகிறது, இத்தொழில், ஒரு

தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு கைவினைத் திறன்களை கொண்டு செல்லப்படுவதன் மூலம் நீடித்துவருகிறது. இத்தொழில் பெரும்பாலும் கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த கைவினைஞர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்களை உள்ளடக்கியது. உள்ளூர் வளங்கள், குறைந்த முதலீடு, தனித்துவ இரகங்களின் உற்பத்தி மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் அங்கீகாரம் ஆகியவை இத்துறைக்கு வலு சேர்க்கிறது.




**கைத்தறி**

கைத்தறி தொழிலானது விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புறங்களில் பெருமளவில் வேலைவாய்ப்பு அளிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்தொழில் குறைந்த மூலதனம், பெருமளவு மனிதவள பயன்பாடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் தனித்துவம் வாய்ந்த சிறிய இரகங்களின் உற்பத்தி ஆகிய சிறப்பம்சங்களை உள்ளடக்கியது.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழில் மாநிலத்தின் பாரம்பரியத்தையும், பொருளாதாரத்தையும் பாதுகாப்பதில் ஒரு முக்கிய அங்கமாகவும் திகழ்கிறது. தமிழ்நாட்டின் 35 மாவட்டங்களில் உள்ள செறிவுப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களான காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பவானி ஜமுக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், கோவை கோரா சேலைகள், பரமக்குடி சேலைகள், சேலம் பட்டு வேட்டிகள் முதலான தனித்துவ வேலைப்பாடுகள் மற்றும் நெசவு நுணுக்கங்கள் கொண்ட இரகங்கள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நான்காவது கைத்தறி கணக்கெடுப்பு 2019–20–ன்படி, இந்தியாவின் கைத்தறி தொழிலில் 35,22,512 கைத்தறி தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர், அவற்றில் 25 இலட்சம் பெண் நெசவாளர்களும், உப தொழில் புரிபவர்களும் உள்ளனர்.

கைத்தறி தொழிலில் பெண்களின் பங்கு தேசிய அளவில் 72 விழுக்காடும், தமிழ்நாட்டில் 52 விழுக்காடாகவும் உள்ளது.




ஆதாரம்: 4–வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019–20

அதிக எண்ணிக்கையிலான பெண்கள் இத்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் அவர்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுகிறது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ளனர். இதில், 60 விழுக்காடு நெசவாளர்கள் மட்டுமே கூட்டுறவு அமைப்பின் கீழ் பதிவு செய்துள்ளனர். கைத்தறிகளின் எண்ணிக்கையில் அசாம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தினை தமிழ்நாடு வகிக்கிறது.

4–வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019–20இன்படி, மாநிலத்திலுள்ள 2.44 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்களில், 1.26 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் செய்பவர்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ளனர். தமிழ்நாட்டில் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு


சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988–இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.




ஆதாரம்: 4–வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019–20


## தமிழ்நாட்டில் சரக வாரியான கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விபரம்

| வ. எண். | சரகத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 74 |
| 2 | சேலம் | 65 |
| 3 | கோயம்புத்தூர் | 61 |
| 4 | கடலூர் | 53 |
| 5 | திண்டுக்கல் | 39 |
| 6 | ஈரோடு | 188 |
| 7 | கரூர் | 43 |
| 8 | கும்பகோணம் | 48 |
| 9 | மதுரை | 38 |
| 10 | நாகர்கோவில் | 35 |
| 11 | பரமக்குடி | 85 |
| 12 | திருச்செங்கோடு | 71 |
| 13 | திருநெல்வேலி | 36 |
| 14 | திருவள்ளூர் | 71 |
| 15 | திருவாரூர் | 6 |
| 16 | திருச்சி | 21 |
| 17 | திருவண்ணாமலை | 24 |
| 18 | திருப்பூர் | 47 |
| 19 | வேலூர் | 55 |
| 20 | விருதுநகர் | 52 |
| | **மொத்தம்** | **1,112** |




ஆதாரம்: 4-வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019-20

2022-23 நிதியாண்டில் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.1190.39 கோடி மதிப்பிலான கைத்தறி துணி இரகங்கள் உற்பத்தி செய்து ரூ.1414.22 கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொண்டுள்ளன.



இருப்பினும், சமீப காலமாக கைத்தறி தொழில் நெருக்கடியை சந்தித்து வருவதன் மூலம் தொடர் தொழில் மேற்கொள்வது கடினமான உள்ளது. உயர்கல்வி படித்த புதிய தலைமுறையினர் கைத்தறி தொழிலை மேற்கொள்வதற்கு முன்வரவில்லை. அதிக வருமானம் ஈட்டுபவர்கள் சமுதாய தகுதியைக் கருதி, மதிப்பு கூட்டப்பட்ட கைத்தறி இரகங்களை வாங்க முன்வரும் போதிலும், அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் குறைந்த கூலியே பெற்றுவருவது முரணாக உள்ளது.

கைத்தறி நெசவின் மதிப்பு தொடரில் உருவாக்கப்பட்டுள்ள வலுவான கட்டமைப்பு மற்றும் பின்வரும் பல்வேறு முன்னெடுப்புகள் மூலம் இத்தொழிலில் கைத்தறி நெசவாளர்களை தக்கவைத்து கொள்வதையும், கைத்தறி தொழிலை பாதுகாப்பதையும் தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது:–

| திட்டம் | முன்னெடுப்புகள் |
|---|---|
| வடிவமைப்பு | தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன், கோ–ஆப்டெக்ஸ் இணைந்து பல்வேறு நெசவு பகுதிகளில் புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்படுகிறது. |
| மூலப்பொருள் ஆதாரம் | கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் வழங்குவதற்காக 6 கூட்டுறவு நூற்பாலைகளை அரசு நிறுவியுள்ளது. |
| நெசவு | தமிழ்நாடு முழுவதும் 35 மாவட்டங்களில் 90 க்கும் மேற்பட்ட கைத்தறி செறிவுப்பகுதிகளில் 1,112 |


| திட்டம் | முன்னெடுப்புகள் |
|---|---|
| | கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| சந்தைப்படுத்துதல் | நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களை சந்தைப்படுத்துவது கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பொறுப்பாகும். மேலும், அயல்நாடுகளில் கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க மின்வணிக தளம் உதவியாக உள்ளது. |
| விற்பனை | இந்தியா முழுவதும் 154 கோ–ஆப்டெக்ஸ் |

| திட்டம் | முன்னெடுப்புகள் |
|---|---|
| | விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் ஆண்டொன்றிற்கு ரூ.200 கோடிக்கும் மேலாக விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மின்வணிக தளத்தின் மூலம் ரூ.8.25 கோடி அளவிற்கு கூடுதல் விற்பனை கோ–ஆப்டெக்ஸால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**கைத்தறி ஏற்றுமதி**


2020–21 ஆம் ஆண்டில், இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மொத்த கைத்தறி ஏற்றுமதியில் தரைவிரிப்புகள் மற்றும் படுக்கை விரிப்புகள் 29 சதவிகிதம் பங்களித்துள்ளது.

இந்தியாவின் மொத்த கைத்தறி ஏற்றுமதியில் வீட்டு உபயோக ஜவுளிகளின் ஏற்றுமதி 60 விழுக்காட்டுக்கும் அதிகமாக உள்ளது. 2020-21 ஆம் ஆண்டில் கைத்தறியில் இருந்து தயாரிக்கப்பட்ட தரைவிரிப்புகள், மற்றும் படுக்கை விரிப்புகள் மொத்த ஏற்றுமதியில் 13.6 விழுக்காடு பங்கைக் கொண்டிருந்தன.




ஆதாரம்: கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் (HEPC)

இந்தியாவின் கைத்தறி ஏற்றுமதி (US$ மில்லியன்)




ஆதாரம்: கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் (HEPC)

இந்தியாவின் முக்கிய கைத்தறி ஏற்றுமதி மையங்கள் கரூர், பானிபட், வாரணாசி மற்றும் கண்ணூர் ஆகும், இப்பகுதிகளில் இருந்து படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், சமையலறை மற்றும் கழிப்பறை உபயோக துணி வகைகள், தரை விரிப்புகள், எம்ப்ராய்டரி செய்யப்பட்ட ஜவுளி பொருட்கள், திரைச்சீலைகள் போன்ற கைத்தறி இரகங்கள் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதி மையங்களான ஈரோடு, கரூர், சேலம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய கைத்தறி பகுதிகளில் படுக்கை விரிப்புகள் மற்றும் வீட்டு உபயோக ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**1.2 விசைத்திறி பிரிவு**


விசைத்தறி தொழில் இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய தொழில்களில் ஒன்றாகவும், துணி உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மூலம் ஜவுளித் துறையில் முக்கியப் பிரிவாகவும் விளங்குகிறது. இத்தொழில் பெரும்பாலும் அமைப்புசாரா தொழிலாகவும், இந்தியாவிலுள்ள திறன்சார் மற்றும் திறன்சாராத 64.36 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகிறது. நாட்டில் தோராயமாக 25.23 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன.

விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகளில் 60 விழுக்காடு செயற்கை இழையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. மேலும், ஏற்றுமதிக்கான துணி

இரகங்களில் 60 விழுக்காட்டிற்கு மேல் விசைத்தறிப் பிரிவு மூலம் பெறப்படுகிறது.



**சாதா விசைத்தறி**



**ரேப்பியர் தறி**



**ஏர்ஜெட் தறி**

இப்பிரிவின் தொழில் நுட்ப நிலையானது சாதா தறியிலிருந்து உயர் தொழில்நுட்ப நாடா இல்லாத தானியங்கி விசைத்தறி வரை உள்ளது. இத்துறையில் தோராயமாக 1.25 இலட்சம் நாடா இல்லாத தறிகள் உள்ளன. ஆனால் அதிக உற்பத்தி மற்றும் மூலதன செலவு காரணமாக அமைப்புசாராத் துறையில் உள்ள ஒரு சில நெசவாளர்கள் மட்டும் நாடா இல்லாத தறிக்கு மாறியுள்ளனர்.

**தமிழ்நாட்டில் விசைத்தறி தொழில்**

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழில் சுமார் 10 இலட்சம் நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்குகிறது மற்றும் பல குடும்பங்களில், அனைத்து குடும்ப உறுப்பினர்களும் விசைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், வேலூர், கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மதுரை, கரூர், திருவள்ளூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில்

விசைத்தறிக் குழுமங்கள் அதிகளவில் உள்ளன. தமிழ்நாட்டில் அதிக அளவு சாதாரண விசைத்தறிகளும், மிகக் குறைந்த அளவு நாடா இல்லா தறிகளும் உள்ளன.

நாட்டில் மொத்தமுள்ள 25.23 லட்சம் விசைத்தறிகளில், தமிழ்நாடு 5.63 லட்சம் விசைத்தறிகளுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. அவற்றுள், மாநிலத்தில் 69,640 விசைத்தறிகள் 226 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் (PWCS) செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்**

| வ.எண். | மாவட்டங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சேலம் | 17 |
| 2. | கோயம்பத்தூர் | 31 |
| 3. | ஈரோடு | 55 |
| 4. | திருச்செங்கோடு | 79 |
| 5. | மதுரை | 2 |
| 6. | திருப்பூர் | 21 |
| 7. | திருவள்ளூர் | 20 |
| 8. | திருநெல்வேலி | 1 |
| | **மொத்தம்** | 226 |

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பெருமளவில் பள்ளி மாணாக்கர்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றிற்கு தேவைப்படும் துணிவகைகள் உற்பத்தி செய்து வருகின்றன.

2022–2023 ஆம் ஆண்டில், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்காக ரூ.478.45 கோடி மதிப்பிலான 1228.05 இலட்சம் மீட்டர் துணிகளையும், விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூ.263.98 கோடி மதிப்பிலான 413.07 இலட்சம் மீட்டர் துணிகளையும் உற்பத்தி செய்துள்ளன. மேலும், வெளிச்சந்தையில் ரூ.56.71 கோடி மதிப்பிலான 145.47 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.61.83 கோடிக்கு 140.47 இலட்சம் மீட்டர் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழிலில் நிலவும் இடர்பாடுகள் மற்றும் சவால்கள் பின்வருமாறு:–

- மாநிலத்தில் உள்ள பெரும்பாலான விசைத்தறிகள் குறைந்த தொழில்நுட்பம் கொண்ட சாதாரண தறிகளாகும்.
- உயர் தொழில் நுட்பம் வாய்ந்த நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகள் குறைவாக உள்ளது.
- குறைந்த மதிப்புள்ள காடா துணிகளின் உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகிறது, அதேசமயம், சூட்டிங், ஷர்ட்டிங் மற்றும் ஆயத்த ஆடை இரகங்கள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட துணி வகைகளின் உற்பத்தி மிகக் குறைவாக உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள விசைத்தறித் தொழிலின் சவால்களைச் சமாளிப்பதற்கும், அடுத்த கட்டத்திற்கு இத்துறையை எடுத்துச் செல்வதற்கும், மதிப்புக் கூட்டப்பட்ட துணிகளுக்கான வளர்ந்து வரும் தேவையினையும், அதன் சாத்தியக்கூறுகளை

அறிவதற்கும் பின்வரும் பகுதிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1. சாதாரண தறிகளை ரேப்பியர் மற்றும் நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகளாக நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
2. தடிமனான பருத்தி நூலின் பயன்பாட்டிலிருந்து, செயற்கை இழை மற்றும் சன்ன ரக பருத்தி நூல் பயன்பாட்டுக்கு மாற்றுதல்.
3. காடா துணிகள் உற்பத்தி செய்வதிலிருந்து அதிக மதிப்பு கூட்டப்பட்ட துணிகளுக்கு மாறுதல்.
4. மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப தறிகள் மற்றும் உயர் தொழில்நுட்ப விசைத்தறி பூங்காக்களை அமைத்தல்.
5. மதிப்பு கூட்டப்பட்ட உற்பத்தியை மாநிலத்திற்குள்ளேயே செயல்படுத்துதல்.
6. மின்வணிக தளத்தை உருவாக்குவதன் மூலம், நேரடி ஏற்றுமதிக்கு வசதி ஏற்படுத்துதல்.

7. நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளுக்காக தற்போதுள்ள குழுமங்களில் பொது வசதி மையங்களை ஏற்படுத்துதல்.
8. திறன் வளர்த்தலை மேம்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள தொழிலாளர்களின் திறமையினை அதிகரித்தல்.

## 2. கைத்தறி துறை

1956 ஆம் ஆண்டில் கூட்டுறவு துறையிலிருந்து தனித்துறையாக கைத்தறி மற்றும் துணிநூல் துறை பிரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் கைத்தறி துறை மற்றும் துணிநூல் துறை என இரண்டாக பிரிக்கப்பட்டு, துணிநூல் தொழிலில் தனி கவனம் செலுத்த ஏதுவாக துணிநூல் துறை என்ற புதிய துறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

கைத்தறி மற்றும் விசைத்தறி பிரிவுகளின் ஒருமித்த வளர்ச்சி மற்றும் இத்தொழிலை சார்ந்துள்ள நெசவாளர்கள், தொழிலாளர்கள், உபதொழில்

செய்பவர்கள் உள்ளிட்ட அனைவரின் நல்வாழ்வினையும் மேம்படுத்துவதே கைத்தறி துறையின் முதன்மை நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இத்தொழிலுக்குத் தொடர்புடைய இதர கூட்டுறவு நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988 இன் கீழ் கைத்தறி ஆணையர் "செயற்பதிவாளராக" செயல்பட அதிகாரம் பெற்றுள்ளார்.

**முக்கிய சவால்கள்**

அரசால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கைத்தறி துறை பின்வரும் சவால்களை தொடர்ந்து சந்தித்து வருகிறது.

1. ஜவுளித்தொழிலில் உள்ள பெருமளவு தொழில்நுட்பம் மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றாலும், கைத்தறிக்கான

தனித்துவமான வாணிப முன்மொழிவு இல்லாமை.

2. நெசவாளர் குடும்பங்களுக்கு குறைந்த அளவிலான கூலி
3. குறைந்த மதிப்புள்ள மற்றும் குறிப்பிட்ட இரகங்களை உற்பத்தி செய்வதில், நெசவாளர்களிடையே ஜவுளி மற்றும் ஆடை அலங்கார வடிவமைப்புகளில் உள்ள புதுமைகளை ஏற்றுக்கொள்வதில் தயக்கம்,
4. நெசவினை ஒரு தொழிலாக மேற்கொள்ள இளைஞர்களிடையே ஆர்வமின்மை.

எனவே, கைத்தறித் தொழிலினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதும், அதன் நோக்கங்களை மறுவரையறை செய்வதும் துறைக்கு இன்றியமையாதது.

**துறையின் நோக்கங்கள்**

மறுவரையறை செய்யப்பட்ட துறையின் நோக்கங்கள் பின்வருமாறு,

- கைத்தறி இரகங்களை மதிப்புமிக்கதாகவும், உற்பத்தியில் புதுமை, கைத்தறியில் இரக மாற்றம் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் சந்தை வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுதல்.
- கைத்தறியின் சந்தை வாய்ப்புகளை பாதிக்கும் ஊடுருவல்களை கட்டுப்படுத்துதல்.
- தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதால், வணிக குறியீட்டின் மூலம் சந்தை வாய்ப்பினை அதிகரித்து கைத்தறிக்கான மதிப்பினை உயர்த்துதல்.
- நெசவாளர்களின் திறன்களை மேம்படுத்துவதுடன் இளம் தலைமுறையினரை கைத்தறித் தொழிலில் ஈடுபடுத்துதல்.
- நெசவாளர்கள் மற்றும் உப தொழில் புரிவோர்களின் கூலி அளவை உயர்த்துதல்.

- நெசவாளர்கள் மற்றும் உப தொழில் புரிவோர்களின் பணிச்சூழலை மேம்படுத்துதல்.
- கைத்தறி துணியின் உற்பத்தித்திறனையும், தரத்தையும் அதிகரிக்க நெசவு முறையில் தொழில்நுட்ப நிலையினை மேம்படுத்துதல்.
- கைத்தறி நெசவாளர்களின் உடல் உழைப்பினை குறைத்திட, நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் தகுந்த தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.
- உண்மையான கைத்தறி நெசவாளர்களுக்கு மானியங்கள் சென்றடைவதை உறுதிசெய்யும் வகையில் நலத்திட்டங்களை முறைப்படுத்துதல்.

மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், பின்வரும் இனங்களில் முன்னுதாரண மாற்றத்தை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது:

**சாதா தறிகளிலிருந்து உயர் தொழில்நுட்ப தறிகள்** வாயிலாக உற்பத்தித்திறனை அதிகரித்து, உற்பத்தி செலவு மற்றும் வேலைப்பளுவினை குறைத்தல்.

**கையால் இயக்கப்படும் ஜக்கார்டிலிருந்து இயந்திரத்தால் இயக்கப்படும் ஜக்கார்டு** மூலம் நெசவாளர்களின் வேலைப்பளுவினை குறைத்து புதிய வடிவமைப்புகளை புகுத்துதல்.

**இல்லங்களிலிருந்து பொது தறிக்கூடங்கள்** மூலமாக நெசவுத் தொழிலை வருவாய் மிக்க தொழிலாக மாற்றுதல்.

**பாரம்பரிய வடிவமைப்பிலிருந்து சமகால வடிவமைப்பு** வாயிலாக வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்பவும், கையால் நெய்யப்பட்ட அசல் கைத்தறி இரகங்கள் மற்றும் கைத்தறி வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்றவாறும் உற்பத்தியை ஊக்குவித்தல்.

இளைய தலைமுறையினரை ஈர்க்கும் வகையில் **அலங்கார வடிவமைப்பு சேலைகளிலிருந்து** உடுத்த **வசதியான சேலைகள்** உற்பத்தி செய்தல்.


**சமூகம் சார்ந்த தொழிலில் இருந்து பொதுத் தொழிலாக** மாற்றி இளைஞர்களுக்கு நெசவுப் பயிற்சி அளித்து அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

**நிர்வாக அமைப்பு**

கைத்தறி துறையானது, தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள மாவட்டங்கள் 20 சரகங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சரகமும் கைத்தறி துணை இயக்குநர் / உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

கைத்தறி துறையின் நிர்வாக அமைப்பினை விளக்கும் நிர்வாக வரைபடம் பின்வருமாறு:

## கைத்தறி துறையின் நிர்வாக கட்டமைப்பு



இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:–

- 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.
- 226 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.
- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) லிட், சென்னை.
- தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்.
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு.
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை.

## 3. திட்டங்கள்

### 3.1 வேட்டி சேலை வழங்கும் திட்டம்

வேட்டி சேலை வழங்கும் திட்டம், 1983–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 2,565 கைத்தறி நெசவாளர்கள், 11,515 பெடல்தறி நெசவாளர்கள் மற்றும் 38,844 விசைத்தறி கூடங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் வசிக்கும் 3.50 கோடி மக்களின் துணித் தேவையினை பூர்த்தி செய்து வருகிறது.


பொங்கல் 2023 பண்டிகையின் போது பயனாளிகளுக்கு வழங்கும் பொருட்டு, கவர்ச்சிகரமாகவும், உடுத்துவதற்கு வசதியாகவும், மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் விதமாகவும் இருக்கும் படியாக 10 மாறுப்பட்ட வண்ணங்களில் 15 விதமான மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளுடனும் 177.64 இலட்சம் சேலைகளும், 5 மாறுபட்ட வண்ணங்களில் 1 அங்குல கரையுடன் 177.23 இலட்சம் வேட்டிகளும் ரூ.624.22 கோடி மதிப்பில் உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு வருவாய்த் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேட்டி மற்றும்

சேலைகளின் தரம் பயனாளிகளிடையே மிகுந்த பாராட்டுதல்களையும் வரவேற்பினையும் பெற்றுள்ளது.

மேலும், கடந்த 2017 –ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நூல் விநியோகிப்பாளர் ஆகியோருக்கு வழங்கப்படாமல் இருந்த நிலுவைத் தொகைகளை வழங்கும் பொருட்டு, அரசு கூடுதலாக ரூ.148.71 கோடியினை விடுவித்து வழங்கியுள்ளது.



**புதிய வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளுடன் சேலைகள்**



**5 மாறுபட்ட வண்ணங்களில் 1 அங்குல கரையுடன் கூடிய வேட்டிகள்**

### 3.1.1 வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கைத்தறி/ பெடல்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்குதல்

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களுக்கு தடையில்லா தொடர் வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை நெசவாளர்களுக்கு உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி/ பெடல்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஜனவரி 2022 முதல் ஜூன் 2022 வரை கீழ்கண்டவாறு துறையினால் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இரகம் | தறிகளின் எண்ணிக்கை | உற்பத்தி திட்டம் | |
|---|---|---|---|---|
| | | | சேலை | வேட்டி |
| 1 | கைத்தறி சேலை | 940 | 82,405 | – |
| 2 | கைத்தறி வேட்டி | 1500 | – | 1,69,045 |
| 3 | பெடல்தறி சேலை | 7,465 | 14,73,115 | – |
| 4 | பெடல்தறி வேட்டி | 2,613 | – | 7,94,890 |
| | **மொத்தம்** | **12,518** | **15,55,520** | **9,63,935** |

நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் வழங்குதல் என்ற துறையின் முதன்மை நோக்கத்தினை வேட்டி சேலை வழங்கும் திட்டம் வாயிலாக பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

## 3.2 பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டம்

ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணக்கர்களுக்கு 4 இணை சீருடைகள் வழங்குவதற்கு தேவையான துணியினை கைத்தறி/ பெடல்தறி மற்றும் விசைத்தறிகளில் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது.






**சீருடையில் பள்ளி மாணாக்கர்கள்**

2022–2023 ஆம் கல்வியாண்டில் 534.15 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி இரகங்கள், ரூ.432.00 கோடி மதிப்பில் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்து சமூக நலத்துறைக்கு தைக்கும் பணிக்காக வழங்கப்பட்டு, அவை பள்ளிக் குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவாறு பள்ளி கல்வித்துறையின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

| வ. எண் | தறி இரகம் | தறிகளின் எண்ணிக்கை | சீருடை துணியின் அளவு (இலட்சம் மீட்டரில்) | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | கைத்தறி | 448 | 6.77 | 7.95 |
| 2 | பெடல்தறி | 6,734 | 110.95 | 82.87 |
| 3 | விசைத்தறி | 3,267 | 416.43 | 341.18 |
| | **மொத்தம்** | **10,449** | **534.15** | **432.00** |

2022-23 ஆம் கல்வி ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீருடை துணிகளின் தறி வாரியான உற்பத்தி (ரூ.கோடியில்)




இத்திட்டத்தின் கீழ் 21.26 இலட்சம் மாணவர்களுக்கும், 20.98 இலட்சம் மாணவிகளுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத்துறை மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் வரும் மாணாக்கர்களுக்கும் சீருடைத் துணிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது.

## சீருடைத் துணி உற்பத்தி திட்டம்
## கல்வியாண்டு 2023 – 2024

| துறையின் பெயர் | உத்தேச துணி தேவை (இலட்சம் மீட்டரில்) | மாணாக்கர்களின் உத்தேச எண்ணிக்கை |
|---|---|---|
| சமூக நலத்துறை ( I முதல் VIII –ஆம் வகுப்பு) | 534.150 | 42,24,039 |
| பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதியில் பயிலும் மாணாக்கர்கள் (IV முதல் X –ஆம் வகுப்பு) | 1.960 | 16,536 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை விடுதியில் பயிலும் மாணாக்கர்கள் (IV முதல் X –ஆம் வகுப்பு) | 1.790 | 13,582 |
| சிறுபான்மையினர் நலத்துறை (IV முதல் X–ஆம் வகுப்பு மாணாக்கர்கள்) | 0.039 | 188 |
| **மொத்தம்** | **537.939** | **42,54,345** |

**3.3. கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குதல்**

தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை 2006–07 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தை இரு மாதங்களுக்கு 200 அலகுகளிலிருந்து 300 அலகுகள் வரை உயர்த்தி 03.03.2023 முதல் அரசு வழங்கி வருகிறது.

இத்திட்டத்திற்காக 2022–23 ஆம் ஆண்டில் ரூ.6.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 2022–23 ஆம் ஆண்டில் 73,334 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இலவச மின்சாரம், நெசவாளர்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு சிறந்த பணிச் சூழலை உறுதி செய்கிறது.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 7.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.4 விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானிய மின்சாரம் வழங்குதல்**

தமிழ்நாடு அரசு விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை 2006-07 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. விசைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தை இரு மாதத்திற்கு 750 அலகுகளிலிருந்து 1,000 அலகுகள் வரையும், 1,000 அலகுகளுக்கு மேல் மானியத்துடனும் 03.03.2023 முதல் கீழ்க்கண்ட அட்டவணைப்படி அரசு வழங்கி வருகிறது.

| அலகு | ஒரு அலகிற்கான மின் கட்டணம் | ஒரு அலகிற்கு அரசு வழங்கும் மானியம் | ஒரு அலகிற்கு நெசவாளர்கள் செலுத்தும் மின் கட்டணம் |
|---|---|---|---|
| | (தொகை ரூபாயில்) | | |
| 1-500 | 6.50 | 6.50 | இலவசம் |
| 501-750 | 7.50 | 7.50 | இலவசம் |
| 751-1000 | 7.50 | 7.50 | இலவசம் |
| 1001-1500 | 7.50 | 3.35 | 4.15 |
| 1500 அலகுகளுக்கு மேல் | 7.50 | 2.20 | 5.30 |

திருத்தப்பட்ட கட்டணம் மற்றும் மானியத்தின்படி, விசைத்தறிக்கு இருமாதத்திற்கு 1,001 அலகுகளுக்கு மேல் நுகரப்படும் அலகுகளுக்கு மின் கட்டணமாக அலகுக்கு 70 பைசா ஒரே மாதிரியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022-23 ஆம் ஆண்டில் ரூ.374.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2022-23 ஆம்

ஆண்டில் 1,65,028 விசைத்தறி நெசவாளர்கள் இதன்மூலம் பயன்பெறுவார்கள்.

விசைத்தறிகளுக்கான இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் மாவட்ட அளவிலான அலகுகள்



இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.513.67 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.5. தள்ளுபடி மானியத் திட்டம்**

கைத்தறி துணி விற்பனையை ஊக்குவிப்பதற்காகவும், தனியார் சந்தையில் போட்டியிடுவதற்காகவும், தமிழக அரசால் தள்ளுபடி மானிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தால் (கோ-ஆப்டெக்ஸ்) விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும், நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பினை அளிக்கவும் உதவுகிறது. இத்திட்டம் கைத்தறி துணி வகைகள் வெளிச் சந்தையில் போட்டியிடுவதற்கு உதவுகிறது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றால் விற்பனை செய்யப்படும் கைத்தறி துணிகளின் விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த தள்ளுபடியானது பருத்தி ரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு ரூ.100/– அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, அதே போன்று பட்டு துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/– அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, என்ற வரையறைக்குட்பட்டு தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை நினைவு கூறும் வகையில், கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து, பருத்தி துணி வகைகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.150/– மற்றும் பட்டு துணி வகைகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.300/– இதில் எது குறைவோ

அத்தொகை தள்ளுபடி மானியமாக செப்டம்பர் 15–ஆம் தேதி முதல் ஜனவரி 31–ஆம் தேதி வரை 139 நாட்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

2022–2023 ஆம் நிதி ஆண்டில் தள்ளுபடி மானிய நிலுவைத் தொகையினை ஒப்பளிப்பு செய்வதற்காக மாநில அரசால் ஏற்கனவே வழங்கப்பட்ட ரூ.150.00 கோடியிலிருந்து, கூடுதலாக ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்த தொகையான ரூ.200.00 கோடி 852 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்) ஆகியவற்றுக்கு விடுவிக்கப் பட்டுள்ளது.

தள்ளுபடி மானியத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2023–24 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் மதிப்பீட்டில் ரூ250.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.6 வட்டி மானியத் திட்டம்

தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நபார்டு வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் பெற்று வரும் காசுக் கடனுக்கு வட்டி மானியம் வழங்கும் திட்டமானது 1956ஆம் ஆண்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது 2002ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டு, 2008ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் விதிக்கப்படும் வட்டி விகிதத்தில் 6 விழுக்காடு வட்டி மானியம் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2022-23ஆம் நிதியாண்டில் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.14.56 கோடி வட்டி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்காக 2023-24 ஆம் ஆண்டு வரவு

செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.21.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.7. கைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, 2021–22–ஆம் நிதியாண்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.4.00 இலட்சம் மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டத்தினை அறிவித்தது. இதற்கான நிதி பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின்கீழ் இணைந்து செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் கிராமப்புறங்களில் 500 வீடுகளும், நகர்ப்புறங்களில் 500 வீடுகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கிராமப்புறங்களிலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் நகர்ப்புறங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது,

**பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா 'அனைவருக்கும் வீடு' என்ற திட்டத்தின்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் மானியம்**

| வ. எண். | மானியத் தொகை | PMAY கிராமப்புறம் | PMAY நகர்ப்புறம் |
|---|---|---|---|
| | | (ரூபாயில்) | |
| 1 | ஒன்றிய அரசு பங்கு | 79,200/- | 1,50,000/- |
| 2 | தமிழக அரசின் பங்கு | 1,72,800/- | 60,000/- |
| 3 | **மொத்த மானியம்** | **2,52,000/-** | **2,10,000/-** |
| 4 | மாநில அரசின் கூடுதல் மானியம் | 1,48,000/- | 1,90,000/- |
| **மொத்த மானியத் தொகை** | | **4,00,000/-** | **4,00,000/-** |

2022-23 ஆம் ஆண்டில், கிராமப்புறங்களில் 70 பயனாளிகளுக்கும், நகர்ப்புறங்களில் 511 பயனாளிகளுக்கும் வீடுகள் கட்ட கூடுதல் மானியமாக ரூ.10.74 கோடியை தமிழக அரசு அனுமதித்துள்ளது.

## 4. சமூக பாதுகாப்புத் திட்டங்கள்

நெசவாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்துள்ளவர்களது சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


**4.1 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்**

கைத்தறி நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்கவும், மாநில அரசு, 1975 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், அவர்கள் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் செலுத்தப்படும் பங்களிப்பு தொகையும் மற்றும் மாநில அரசு அதற்கு இணையாக ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் அளிக்கப்படும் பங்களிப்பு தொகையும், அரசு கணக்கில் வைப்பீடு செய்யப்படுகிறது மற்றும் இவ்வைப்பீடு தொகைக்கு மாநில அரசு 6.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் 50,590 நெசவாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2022–2023 ஆம் ஆண்டில், நெசவாளர்களின் பங்களிப்பிற்கு இணையான மாநில அரசு பங்காக ரூ.9.97 கோடி அனுமதித்துள்ளது மற்றும் 2021–22 ஆம் ஆண்டிற்குட்பட்ட திட்டத்திலுள்ள வைப்புத்தொகைக்கு 6.5 விழுக்காடு வட்டி ரூ.25.21 கோடி மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது.




இத்திட்டம் 2023–2024ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக மாநில அரசின் பங்களிப்பாக ரூ.12.00 கோடியும் மற்றும் 6.5 விழுக்காடு வட்டி தொகையாக ரூ.25.00 கோடியும் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.2 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

1997 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 60 வயது நிரம்பிய உறுப்பினர்கள் முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/- மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 26,434 கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

2022-23 ஆம் ஆண்டில், முதியோர் ஓய்வூதியத் தொகையாக ரூ.32.49 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2023-2024ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்

**4.3** **தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

தமிழ்நாடு அரசானது, காலஞ்சென்ற நெசவாளர்களின் குடும்ப நலனுக்காக தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை 01.01.1992 முதல் செயல்படுத்தி வருகிறது.

ஒரு கைத்தறி நெசவாளர் 60 வயதை அடையும் முன் இறக்க நேரிட்டால், நெசவாளர் இறந்த நாளிலிருந்து 10 ஆண்டுகள் அல்லது நெசவாளரின் 60 வயது வரை (காலஞ்சென்ற நெசவாளர் உயிருடன் இருந்திருந்தால்) இதில் எது அதிக பயனளிக்குமோ அவ்வகையில் நெசவாளரின் வாரிசுதாரருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.1000/- வழங்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில் 1,149 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.1.41 கோடி குடும்ப ஓய்வூதியத்தை அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாடு முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய திட்டத்திற்கு வரவு செலவு திட்டத்தில் ரூ.35.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.4 கைத்தறி நெசவாளர் ஆயுள் காப்பீடு திட்டங்கள்

இந்திய அரசானது 2021-22 ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய வழிகாட்டுதல்களின்படி, கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக 18 முதல் 50 வயதுக்குட்பட்டோருக்கு பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY), 18 முதல் 70 வயது வரை உள்ளவர்களுக்கு பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (PMSBY) மற்றும் 51 முதல் 59 வயது வரை உள்ளவர்களுக்கு மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா (MGBBY) போன்ற ஆயுள் காப்பீட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.

திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | வயது | காப்பீட்டு தொகை பங்கு (ரூ.) | | | பயன் (ரூ. இலட்சத்தில்) | | | | திட்டத்தில் உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஒன்றிய அரசு | மாநில அரசு/ பயனாளி | மொத்தம் | இறப்பு | | ஊனம் | | |
| | | | | | | இயற்கை | விபத்து | நிரந்தரம் | பகுதி | |
| 1. | PMJJBY | 18–50 | 150 | 286 | 436 | 2.00 | 2.00 | -- | -- | 57,592 |
| 2. | PMSBY | 18–70 | 12 | 8 | 20 | -- | 2.00 | 2.00 | 1.00 | 25,613 |
| 3. | MGBBY | 51–59 | 290 | 180 | 470 | 0.60 | 1.50 | 1.50 | 0.75 | 26,303 |

இத்திட்டம் 2023–24 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இதற்காக 2023–24ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.92.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.5 கைத்தறி நெசவாளர்களுக்கான மருத்துவ காப்பீட்டு திட்டம்

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB–PMJAY) திட்டத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்

ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூ.5.00 இலட்சம் வரை காப்பீடு வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அனைத்து தகுதியான நெசவாளர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேற்படி திட்ட காலமானது 11.01.2022 முதல் 10.01.2027 வரையும் செயல்பாட்டில் உள்ளதால், தற்போது வரையில் 59,750 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 4.6 நல வாரியங்கள்

### 4.6.1 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர் நல வாரியம் உட்பட தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர் வாரியம் மற்றும் 9 பிற நல வாரியங்கள் நெசவாளர்களின் நலனை உறுதி செய்வதற்காக 2000–2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியம் 21.07.2004 முதல்

உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரியத்துடன் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியம் 01.09.2006 முதல் தொழிலாளர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் தனியாக இயங்கி வருகிறது.

நிதி உதவி, கல்வி உதவி, இயற்கை மற்றும் விபத்து மரணம் மற்றும் இயலாமைக்கான காப்பீட்டுத் தொகை கீழ்க்காணும் விவரங்களின்படி தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியத்தால் வழங்கப்படுகிறது:

| வ. எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | விபத்து காப்புறுதி திட்டம்<br>அ) விபத்தால் மரணம் | 1,25,000 |
| | ஆ) விபத்தால் ஊனம் (ஊனத்தின் தன்மையை பொருத்து) | 1,00,000 வரை |
| | இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | |

| வ. எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| 2 | இயற்கை மரணம் | 30,000 |
| 3 | ஈமச்சடங்கு உதவி | 5,000 |
| 4 | கல்வி உதவித் தொகை | |
| | i) 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | ii) 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | iii) 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | iv) 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,500 |
| | v) 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | vi) இளநிலை பட்டப்படிப்பு | 1,500 |
| | vii) இளநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 1,750 |
| | viii) முதுநிலை பட்டப்படிப்பு | 4,000 |
| | ix) முதுநிலை பட்டப்படிப்பு (விடுதி) | 5,000 |
| | x) தொழில்நுட்ப படிப்பு (**Professional Degree**) | 4,000 |
| | xi) தொழில்நுட்ப படிப்பு (விடுதி) | 6,000 |
| | xii) தொழில்நுட்ப மேற்படிப்பு | 6,000 |
| | xiii) தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதி) | 8,000 |
| | xiv) ஐடிஐ / பட்டயப்படிப்பு | 1,000 |

| வ. எண் | இனம் | ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|
| | xv) ஐடிஐ / பட்டயப்படிப்பு (விடுதி) | 1,200 |
| 5 | திருமண உதவி | |
| | அ) ஆண் | 3,000 |
| | ஆ) பெண் | 5,000 |
| 6 | மருத்துவ உதவிகள் | |
| | i)மகப்பேறு உதவி | 6,000 |
| | ii)கருச்சிதைவு | 3,000 |
| | iii) மூக்குக்கண்ணாடி | 500 வரை |
| 7 | ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | 1,000 |

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியத்தில் 31.03.2022 வரை 1,11,935 நெசவாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2022–23 நிதியாண்டில், 28.02.2023 வரை 3,537 புதிய நெசவாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2022–23ஆம் ஆண்டில் 28.02.2023 வரை 15,135 பயனாளிகளுக்கு ரூ.13.98 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 4.6.2 தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம்

விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1982–ன் கீழ் " தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம் " என்ற அமைப்பினை தமிழக அரசு உருவாக்கியது.

இந்த நலவாரியத்தின் மூலம் விபத்துக் காப்பீட்டுப் பயன், இயற்கை மரணத்திற்கான காப்பீட்டுப் பயன், ஈமச்சடங்கு செலவினத்திற்கான உதவித் தொகை, கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி வாங்குவதற்கும் மற்றும் ஓய்வூதியப் பயன் போன்றவற்றிற்கான உதவித் தொகைகள் விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் 28.02.2023 வரை 89,000 விசைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக

சேர்க்கப்பட்டு, 2022–2023 ஆம் ஆண்டில் 28.02.2023 வரை, ரூ.8.42 கோடி நிதியுதவி 10,583 தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

## 5. கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்


### 5.1 ஒன்றிய நிதி உதவித் திட்டம்

### 5.1.1 குழும வளர்ச்சித் திட்டம்

ஒன்றிய அரசு 2021–22 முதல் 2025–2026 வரையிலான ஆண்டுகளுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த திருத்திய வழிகாட்டுதல்களை அளித்துள்ளது. தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குழும வளர்ச்சித் திட்டமானது கூட்டுறவு சார்ந்த மற்றும் சாராத கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒரு குழும வளர்ச்சித் திட்டம் அமைக்க ஒன்றிய அரசின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட நிதியாக ரூ.200.00 இலட்சம்

கீழ்க்குறிப்பிட்டுள்ள 4 இனங்களுக்கு வழங்கப்படுகிறது:




| இனம் | | நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஹத்கர்கா சம்வர்தன் சஹாயதா அதாவது தறிகள்/உபகரணங்கள்,மின் விளக்குகள், தனித் தறிகூடம் அமைத்தல், பொது தறிக்கூடம் அமைத்தல், பொது தறிக்கூடத்திற்கு சோலார் மின் விளக்குகள் பொருத்துதல். தனித் தறிக்கூடம் அமைக்க ரூ.150.00 இலட்சத்தில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும், | 150.00 |
| 2 | வடிவமைப்பாளர் நியமித்தல் | 15.00 |
| 3 | திட்ட மேலாண்மை செலவு | 15.00 |
| 4 | இதர இனங்கள் | 20.00 |
| | **மொத்தம்** | **200.00** |

தமிழ்நாடு அரசு 2021–22 வரை 58 குழும வளர்ச்சித் திட்டங்களை ரூ.8863.59 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேற்கொண்டுள்ளது. இதுவரை ஒன்றிய அரசால் ரூ.6258.15 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளதில், ரூ.5777.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 39,315 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.



**விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தின் கீழ் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் அமைக்கப்பட்ட மாவட்ட அளவிலான கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் கூடிய சாயச்சாலை**




**திருச்சி மற்றும் விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தின் கீழ் கட்டப்பட்ட புதிய சாயச்சாலைகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது**

ஒன்றிய அரசு 2022–23 ஆம் ஆண்டில், 1,870 நெசவாளர்கள் பயனடையும் வகையில் மொத்த திட்ட மதிப்பீடான ரூ.933.943 இலட்சத்தில் பின்வரும் 8 புதிய குழுமங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது:

| வ. எண் | குழும வளர்ச்சித் திட்டத்தின் பெயர்/மாவட்டம் | செயலாக்க முகமை | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்த திட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | எமனேஸ்வரம்–1 குழுமம், இராமநாதபுரம் | கலைமகள் கைத்தறி நெ.கூ. சங்கம் | 223 | 190.310 |

| வ. எண் | குழும வளர்ச்சித் திட்டத்தின் பெயர்/மாவட்டம் | செயலாக்க முகமை | பயனாளி களின் எண்ணி க்கை | மொத்த திட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 2. | பாரத ரத்னா எம்.ஜி.ஆர் குழுமம், சேலம் | கைத்தறி துறை, சென்னை | 200 | 130.800 |
| 3 | ஸ்ரீ சௌடேஸ்வரி குழுமம், சேலம் | கைத்தறி துறை, சென்னை | 346 | 116.790 |
| 4 | அன்னை பவானி குழுமம், ஈரோடு | அன்னை பவானி தொடக்க கைத்தறி நெ.கூ. உ & வி. சங்கம் | 354 | 98.00 |
| 5 | கிள்ளியூர் குழுமம், கன்னியாகுமரி | ஆக்கவிளாகம் தொடக்க கைத்தறி நெ.கூ. உ & வி. சங்கம் | 200 | 111.150 |
| 6 | நசியனூர் குழுமம், ஈரோடு | நசியனூர் தொடக்க கைத்தறி நெ.கூ. சங்கம் | 205 | 92.300 |
| 7 | காஞ்சிபுரம் குழுமம், காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெ.கூ. சங்கம் | 150 | 117.893 |

| வ. எண் | குழும வளர்ச்சித் திட்டத்தின் பெயர்/மாவட்டம் | செயலாக்க முகமை | பயனாளி களின் எண்ணி க்கை | மொத்த திட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 8 | திண்டுக்கல் குழுமம், திண்டுக்கல் | ஸ்ரீ கௌரியம்மன் பருத்தி (ம) பட்டு கைத்தறி நெ.கூ. சங்கம் | 192 | 76.700 |
| | | **மொத்தம்** | **1870** | **933.943** |

இத்திட்டம் நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளை மேற்கொள்ள மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட தறி மற்றும் உபகரணங்களை வழங்குவதன் மூலம் கைத்தறி நெசவாளர்களின் உடல் உழைப்பினை குறைக்கிறது.

## 5.1.2 நெசவாளர் முத்ரா திட்டம்

2016-17 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் ஒரு அங்கமாக "நெசவாளர் முத்ரா திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கைத்தறி தொழிலுக்கு விளிம்புத் தொகையாக 20 விழுக்காடும், வங்கிகளால் விதிக்கப்படும் வட்டி

விகிதத்திற்கும், பயனாளிகள் செலுத்தும் 6 விழுக்காடு வட்டிக்கும் உள்ள வித்தியாசத் தொகையில், 7 விழுக்காட்டிற்கு மிகாமல் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு வட்டி மானியமாக மூன்றாண்டுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

2021-22 முதல் 2025-26 வரையிலான காலத்திற்கு வழங்கப்படும் விளிம்பு தொகை விபரம் பின்வருமாறு:

1. கைத்தறி நெசவாளர் / நெசவு தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 20 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.25,000/- மானியமாக வழங்கப்படுகிறது.

2. குறைந்தபட்சம் 100 நெசவாளர்கள் / தொழிலாளர்கள் பணிபுரியும் கைத்தறி அமைப்புகள் / நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரையில் கடன் தொகையும்,

மானியத் தொகையாக ரூ.2.00 இலட்சமும் வழங்கப்படுகிறது.

வங்கி விதிமுறைகளின்படி கூடுதல் விளிம்புத் தொகை தேவை இருப்பின் பயனாளி நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 2022-23 ஆம் ஆண்டிற்கு, 13,618 பயனாளிகளுக்கு முத்ரா கடன் தொகையாக ரூ.66.70 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 5.1.3 கைத்தறி சந்தைப்படுத்துதலுக்கான நிதியுதவி

தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய கைத்தறி கண்காட்சிகள், மாநில கைத்தறி கண்காட்சிகள் மற்றும் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகள் நடத்த ஒன்றிய அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இக்கண்காட்சிகள் நடத்துவதற்கு வழங்கப்படும் நிதியுதவி விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | விபரம் | வழங்கப்படும் நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தேசிய கைத்தறி கண்காட்சி | 45.00 |
| 2. | மாநில கைத்தறி கண்காட்சி | 30.00 |
| 3. | மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சி | 6.00 |

2022-23ஆம் ஆண்டில் ஒரு தேசிய கைத்தறி கண்காட்சி, நான்கு மாநில கைத்தறி கண்காட்சி மற்றும் இரண்டு மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகள் நடத்த ரூ.158.62 இலட்சம் ஒன்றிய அரசால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சேலம், கும்பகோணம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாநில கைத்தறி கண்காட்சியும், இராமநாதபுரம் மற்றும் கடலூரில் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சியும் நடத்தப்பட்டு ரூ.362.04 இலட்சம் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சென்னையில் 29.03.2023 அன்று துவங்கியுள்ள தேசிய கைத்தறி கண்காட்சியில் 80க்கும் மேற்பட்ட

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், பிற மாநிலங்களைச் சேர்ந்த கைத்தறி நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன.

இந்த திட்டமானது கைத்தறி இரகங்களை வெளி சந்தைகளில் விற்பனை மேற்கொள்ள பெரிதும் உதவுகிறது. இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 5.2 ஒன்றிய மற்றும் மாநில அரசின் பகிர்வு திட்டம்

### 5.2.1 விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்

விற்பனை ஊக்குவிப்பு திட்டம் என்பது இந்திய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் (NHDP) ஒரு அங்கமாகும். இத்திட்டத்தில், கைத்தறி நிறுவனங்களின் விற்பனையினை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை வெளிச்சந்தையில்

போட்டியிட்டு நிலைத்திட உதவுகிறது. மேலும், இத்திட்டம் கைத்தறி பொருட்களின் விலையினை குறைத்திடவும், சந்தைபடுத்தும் நடவடிக்கையினை மேம்படுத்தவும் உதவுகிறது.

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10 விழுக்காடு விற்பனை ஊக்குவிப்புத் தொகை பெற தகுதியுடையவை, இது ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

திட்ட காலமான 5 வருடத்தில் (2021–22 முதல் 2025–26 வரை) அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும். தகுதியான கைத்தறி நிறுவனங்கள் மற்றும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு:

| தகுதியுடைய கைத்தறி நிறுவனங்கள் | அதிக பட்ச ஊக்குவிப்புத் தொகை | நிதி உதவி |
|---|---|---|
| மாநில அளவிலான கைத்தறி நிறுவனம், மாநில அளவிலான கூட்டுறவு சங்கம் மற்றும் தேசிய அளவிலான கூட்டுறவு சங்கம் | ரூ.100 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு) | மூன்று ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10 சதவிகிதம் |
| தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | ரூ.15.00 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு) | |

விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.32.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2.2 பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டு பூங்கா, காஞ்சிபுரம்**

பட்டு கைத்தறி இரகங்களின் உற்பத்தியை மேம்படுத்தவும், உலக தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த கைத்தறி பணிகளை மேற்கொள்ளவும் பேரறிஞர் அண்ணா

கைத்தறி பட்டு பூங்கா 2010–ல் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டது.

இப்பட்டுப் பூங்காவானது 75 ஏக்கர் நிலப்பரப்பில் காஞ்சிபுரம் மாவட்டம், கீழ்கதிர்ப்பூர் கிராமத்தில் ரூ.82.56 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டுப் பூங்காவிற்காக நிலம் கொள்முதல், நிலத்தை மேம்படுத்துதல், நீர் ஆதாரத்திற்காக ஆழ்துளை கிணறுகள், இணைச் சாலைகள், தொழிற்சாலை கட்டடங்கள் அமைத்தல், ஆலோசனை கட்டணங்கள் மற்றும் பிற செலவினங்களுக்காக இதுவரை ரூ.38.95 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டு பூங்காவின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- கைத்தறி நெசவாளர்கள், வடிவமைப்பாளர்கள், சாயத் தொழிலாளர்கள் மற்றும் இதர கைத்தறி தொடர்பான உப தொழில் புரிபவர்கள் என

நேரடியாக மற்றும் மறைமுகமாக 18,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள்.

- பூங்காவின் உத்தேச முதலீடு ரூ.120.00 கோடி.
- பூங்காவின் உத்தேச விற்றுமுதல் ரூ.278.00 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- திட்டமிடப்பட்டுள்ள 24 கைத்தறி நெசவு கூடங்களில், 11 நெசவு கூடங்களின் கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளன.
- தற்போது 6 கைத்தறி நெசவு கூடங்கள் 135 தறிகளுடன் இயக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 5 நெசவு கூடங்களில் தறிகள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.
- சாலைகள், தண்ணீர், மின்சாரம், எல்லைச் சுவர் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளது.





**பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டு பூங்கா, காஞ்சிபுரம்**

## 5.3 மாநில அரசுத் திட்டங்கள்

### 5.3.1 கைத்தறி ஆதரவுத் திட்டம்

மாநிலத்தில் கைத்தறி தொழிலை தக்கவைக்க உரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் நோக்கில் கைத்தறி ஆதரவுத் திட்டமானது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, பல்வேறு இனங்களுக்கு 3 ஆண்டுகளாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் தொழில்நுட்ப மேம்பாடு இனத்தின் கீழ் 27,250 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர். இது தவிர, சந்தைப்படுத்தக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்ய உதவும் வகையில் பரவலான முறையில் சந்தைப்படுத்துதல், வணிகக்குறியீடு பிரபலப்படுத்துதல், வடிவமைப்பு மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி உள்ளிட்டவை கைத்தறி ஆதரவுத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.



**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள் கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் தறி மற்றும் தறி உபகரணங்களை பயனாளிகளுக்கு திருவண்ணாமலையில் வழங்கினார்**

இத்திட்டம் 2023-24 ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.3.2 விருதுகள்

### 1. சிறந்த ஏற்றுமதியாளர் விருது

கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டு சந்தைகளில் கைத்தறி துணி விற்பனையை மேம்படுத்தவும், தமிழ்நாடு அரசால் சிறந்த ஏற்றுமதியாளர் விருது வழங்கும் திட்டம்

1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு கேடயங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்க ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 இலட்சம் நிதி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

2021-22ஆம் ஆண்டில் முதல் மூன்று ஏற்றுமதியாளர்களுக்கு சிறந்த ஏற்றுமதியாளர் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.08.2022 அன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.




**2021-22 ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறந்த ஏற்றுமதியாளர் விருதாளர்களுடன் தலைமைச் செயலகத்தில் 08.08.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

இத்திட்டத்திற்கு 2023-24 ஆண்டில் ரூ.1.00 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. திறன்மிகு நெசவாளர்கள் விருது**

கவர்ச்சியான வடிவமைப்புகளுடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி புடவைகள், வேட்டிகள் மற்றும் கைத்தறி ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் "திறன்மிகு நெசவாளர் விருது" 20 பிரிவுகளில் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி இரகங்களின் காட்சித் தோற்றம், வண்ணக் கலவை, வடிவமைப்பில் தனித்தன்மை, கூடுதல் வேலைப்பாடுகள் மற்றும் இரகங்களின் சிறப்பு அம்சங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விருதுக்கான பயனாளிகள் மாநில அளவிலான குழுவால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இவ்விருதின் கீழ், 20 பிரிவுகளில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு என

60 திறன்மிகு கைத்தறி நெசவாளர்களுக்கு பின்வரும் விவரப்படி பரிசுத்தொகைகள் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதல் பரிசு | 10,000 |
| இரண்டாம் பரிசு | 6,000 |
| மூன்றாம் பரிசு | 4,000 |



**திறன்மிகு நெசவாளர் விருது கோ–ஆப்டெக்ஸில் 07.08.2022 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது**

இத்திட்டத்திற்கான செலவின தொகை ரூ.4.00 இலட்சம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் 2023–24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3. மாநில அளவிலான சிறந்த நெசவாளர்கள் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர்கள் விருது

புதுமையான மற்றும் கண்கவர் வடிவமைப்புகளை புகுத்தி தற்போதைய சந்தை தேவைக்கேற்ப பட்டு மற்றும் பருத்தி கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வரும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் **"சிறந்த நெசவாளர் விருது"** வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் துணி இரகங்களை சந்தைப்படுத்த ஏதுவாக நவீன வடிவமைப்புகளை திறம்பட உருவாக்கி வழங்கும் வடிவமைப்பாளர்களை கௌரவிக்கும் வகையில் **"சிறந்த வடிவமைப்பாளர் விருது"** வழங்கும் திட்டமும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021–22ஆம் ஆண்டுக்கு பட்டு மற்றும் பருத்தி இரகங்களுக்கு சிறந்த நெசவாளர் விருதானது ரூ.20.00 இலட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.08.2022 அன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2021–22 ஆம் ஆண்டின் மூன்று சிறந்த வடிவமைப்பாளர்களுக்கு விருதுகள் 07.08.2022 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

சிறந்த கைத்தறி நெசவாளர் விருது மற்றும் சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைகள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) | மொத்த பரிசுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | சிறந்த நெசவாளர் (பட்டு இரகம்) | 500000 | 300000 | 200000 | 1000000 |
| 2. | சிறந்த நெசவாளர் (பட்டு இரகம்) | 500000 | 300000 | 200000 | 1000000 |
| 3. | சிறந்த வடிவமைப் பாளர் | 25000 | 10000 | 5000 | 40000 |
| மொத்தம் | | 1025000 | 610000 | 405000 | 2040000 |

இத்திட்டத்தினை 2022-23 ஆண்டில் செயல்படுத்தும் பொருட்டு ரூ.20.40 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2023-24ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.08.2022 அன்று தலைமைச்செயலகத்தில்**
**2021–22 ஆம் ஆண்டிற்கான சிறந்த நெசவாளர் விருது (பட்டு மற்றும் பருத்தி) வழங்கி கௌரவிக்கப்பட்டது**



**மாநில அளவில் சிறந்த நெசவாளர் 2021–22**
**பட்டு இரகம்**



**மாநில அளவில் சிறந்த நெசவாளர் 2021-22**
**பருத்தி இரகம்**



**சிறந்த வடிவமைப்பாளர் விருது கோஆப்டெக்ஸில் 07.08.2022 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது**

## 4. மாநில அளவில் இளம் வடிவமைப்பாளர்களிடமிருந்து சிறந்த வடிவமைப்புகள்


இளம் தலைமுறையினரிடையே கைத்தறி இரகத்தின் மீது பிணைப்பை ஏற்படுத்தவும், அவ்வப்போது மாறி வரும் நவீன சந்தையின் தேவையினை அறிந்து புதிய வாடிக்கையாளர்களை கவர ஏதுவாகவும், கைத்தறி இரகங்களில் புதுமையினை புகுத்தி விற்பனையினை அதிகரித்திடும் நோக்கிலும், மாநில அளவில் இளம் வடிவமைப்பாளர்களிடமிருந்து சிறந்த வடிவமைப்புகளை போட்டித் தேர்வின் மூலம் தேர்வு செய்யும் திட்டமானது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள வடிவமைப்பு நிறுவனங்கள் / ஜவுளி தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு இடையே இப்போட்டி நடத்தப்படுகிறது.

போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படும் முதல் 3 சிறந்த வடிவமைப்புகளுக்கு முதல் பரிசாக ரூ.1,00,000/-, இரண்டாம் பரிசாக ரூ.75,000/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.50,000/- வழங்கப்படும்.



**02.03.2023 அன்று நடைபெற்ற மாநில அளவில் இளம் வடிவமைப்பாளர்களிடமிருந்து சிறந்த வடிவமைப்புகளை தேர்வு செய்யும் குழுக் கூட்டம்**


இதற்கான செலவினத் தொகை ரூ.10.00 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.



மென்பட்டு சேலை



பட்டு சேலை



பருத்தி சேலை



தலையணை உறை

**இளம் வடிவமைப்பாளர்களின் தேர்வு செய்யப்பட்ட சில வடிவமைப்புகள்**

## 5.3.3 கல்வி உதவித்தொகை

**1. டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித்தொகை வழங்குதல்**

நெசவாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் பொருட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் ஐந்து இடம் பெறும் 5 மாணவர்கள் மற்றும் 5 மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பெறப்பட்ட மதிப்பெண்கள் அல்லது பட்டப் படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் 40 பாடப்பிரிவுகளில் மாணாக்கர்கள் தங்கள் படிப்பை

முடிக்கும் காலம் வரை ஆண்டொன்றுக்கு ரூ.1,000/– முதல் ரூ.7,500/– வரை கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 400 மாணாக்கர்கள் (200 மாணவர்கள் மற்றும் 200 மாணவியர்கள்) உதவித் தொகை பெறுகின்றனர்.

இத்திட்டம் 2023–24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்**

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளை ஊக்குவிக்கும் பொருட்டு, 2008 ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை பின்வருமாறு:

| வரிசை | ஊக்கத் தொகை (ரூ) | |
|---|---|---|
| | பத்தாம் வகுப்பு | பன்னிரெண்டாம் வகுப்பு |
| 1 | 5,000 | 10,000 |
| 2 | 3,000 | 7,500 |
| 3 | 2,000 | 5,000 |

**3 சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பக் கழக மாணவர்களுக்கு உதவித்தொகை**

கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் விதமாக, சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனத்தில் (IIHT) கைத்தறி மற்றும் ஜவுளி தொழில்நுட்பத்தில் (DHTT) பட்டயப் படிப்புக்கான விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுவருகிறது.

தமிழ்நாடு அரசும் 1977 முதல் இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனம். சேலத்தில் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை பின்வருமாறு வழங்கி வருகிறது:

| ஆண்டு | ஒரு மாதத்திற்கான உதவித்தொகை ஒரு மாணாக்கருக்கு | ஒன்றிய அரசின் பங்கு 50 விழுக்காடு | தமிழக அரசின் பங்கு 50 விழுக்காடு |
|---|---|---|---|
| | (தொகை ரூ.) | | |
| முதலாம் ஆண்டு | 2500 | 1250 | 1250 |
| இரண்டாம் ஆண்டு | 2500 | 1250 | 1250 |
| மூன்றாம் ஆண்டு | 2500 | 1250 | 1250 |

தமிழ்நாடு அரசு ஒதுக்கீட்டின் கீழ் கடக் (கர்நாடகா), வெங்கடகிரி (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் கண்ணூர் (கேரளா) ஆகிய இடங்களில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையில் தமிழக அரசின் பங்கினை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியில் இருந்து வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் 79 மாணக்கர்களுக்கு 2022-23 ஆண்டுக்கான உதவித் தொகை ரூ.10,12,500/- வழங்கப்பட்டுள்ளது.

## 6. கைத்தறிகளின் மேம்பாட்டிற்கான சட்டங்கள் மற்றும் முத்திரைகள்

### 6.1 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

இச்சட்டம், கைத்தறியில் மட்டுமே பிரத்யேகமாக உற்பத்தி மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட இரகங்களை ஒதுக்கீடு செய்து, கைத்தறிப் பிரிவினை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது கீழ்க்காணும் 11 இரகங்கள் கைத்தறியில் பிரத்யேகமாக உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (1) | சேலை | (2) | வேட்டி |
| (3) | துண்டு / கம்சா மற்றும் அங்கவஸ்திரம் | (4) | லுங்கி |
| (5) | ஜடார் மேகலா/ பாநெக் | (6) | ஜமக்காளம்/ டர்ரி (அ) டர்ரட் |
| (7) | டிரஸ் மெட்டீரியல் | (8) | பேரெக் பிளாங்கெட், கம்பல் (அ) கம்பளி |
| (9) | ஷால், லாய், மப்ளர், பங்கி | (10) | உல்லன் ட்வீடு |
| (11) | கேஸ், பெட்ஷீட், பெட் கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உட்பட) | | |

சென்னை, கைத்தறி ஆணையரகத்தில், துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தினை தலைமையிடமாகக் கொண்டு, பிரத்யேகமான அமலாக்கப் பிரிவும், அதன் நிர்வாகக் கட்டுப்பாட்டில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 5 உதவி அமலாக்க அலுவலர் அலுவலகங்களும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985-ன் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விவரம் பின்வருமாறு :

| வ எண் | மண்டலத்தின் பெயர் | [illegible] 2022-23 | [illegible] | [illegible] 2022-23 | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **ஈரோடு** | 7350 | 7734 | 9 | 15 | 34 | 554 |
| 2 | **மதுரை** | 4000 | 4570 | 5 | 7 | 24 | 453 |
| 3 | **சேலம்** | 6000 | 6793 | 11 | 7 | 37 | 939 |
| 4 | **திருச்செங்கோடு** | 7350 | 8589 | 12 | 16 | 36 | 711 |
| 5 | **திருப்பூர்** | 6900 | 7972 | 8 | 8 | 36 | 702 |
| 6 | **சென்னை** | 400 | 1337 | 0 | 0 | 8 | 219 |
| | **மொத்தம்** | **32000** | **36995** | **45** | **53** | **175** | **3578** |

## 6.2 புவிசார் குறியீடு பொருட்கள் சட்டம், 1999–ன் கீழ் கைத்தறி உற்பத்தி இரகங்களை பதிவு செய்தல்

**புவிசார் குறியீடு**

காஞ்சிபுரம் பட்டுச் சேலை, பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடிச் சேலை, சேலம் பட்டு வேட்டி (வெண்பட்டு), ஆரணி பட்டுச் சேலை, கோவை கோரா காட்டன் சேலை, திருபுவனம் பட்டுச் சேலை, கண்டாங்கி சேலை ஆகியவை கைத்தறித் துறையால் புவிசார் குறியீடு பொருட்கள் (பதிவு செய்தல் மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999, குறிப்பிட்ட பிராந்தியத்தில் உற்பத்தி செய்யப்படும் இந்த சிறப்புப் பொருட்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்குவதற்காகவும், புவிசார் குறியீடு சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தயாரிப்புகளை,

அங்கீகரிக்கப்படாத மற்றும் தவறாகப் பயன்படுத்துவதில் இருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களை பாதுகாக்கிறது.

புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பொருட்களை பதிவு செய்வது, அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், மற்ற நாடுகளில் அவற்றின் பயன்பாடு மற்றும் விற்பனையை பாதுகாக்கிறது, இது உலக வர்த்தக அமைப்பின் (WTO) வர்த்தக அறிவுசார் சொத்து உரிமைகள் (TRIPS) ஒப்பந்தத்தின் கீழ் வருகிறது.




புவிசார் குறியீடு எண் 06/ 2004, காஞ்சிபுரம் பட்டுச் சேலை



புவிசார் குறியீடு எண். 09/ 2004, ஈரோடு பவானி ஜமக்காளம்



புவிசார் குறியீடு எண் 16/ 2005 , மதுரை சுங்குடிச் சேலை



புவிசார் குறியீடு எண் 56/ 2007 : சேலம் வெண் பட்டு வேட்டி




புவிசார் குறியீடு எண் 57/ 2007, கோவை கோரா காட்டன்



**புவிசார் குறியீடு எண் 58/ 2007 : ஆரணி பட்டுச் சேலை**



**புவிசார் குறியீடு எண் 342/ 2019: திருபுவனம் பட்டுச் சேலை, கும்பகோணம்**



புவிசார் குறியீடு எண் 422/2019 கண்டாங்கிச் சேலை

தமிழ்நாடு மாநிலத்தின் பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களை தற்போது வரை புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகள் விவரங்கள் பின்வருமாறு உள்ளது:

| வ. எண் | புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் கைத்தறிஇரகம் | புவிசார் குறியீடு பதிவு எண் மற்றும் ஆண்டு | புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கும் பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் பட்டு சேலைகள் | புவிசார் குறியீடு எண் 06/2004 நாள் 07.10.2004 | 21 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 தனியார் உற்பத்தியாளர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 2 | பவானி ஜமக்காளம் | புவிசார் குறியீடு எண் நாள் 25.10.2004 | 30 பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் |
| 3 | மதுரை சுங்குடிச் சேலைகள் | புவிசார் குறியீடு எண் 16/2005 நாள் 24.01.2005 | 02 பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் |
| 4 | சேலம் வெண்பட்டு வேட்டிகள் | புவிசார் குறியீடு எண் 56/2007 நாள் 16.05.2007 | 08 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் |
| 5 | கோரா காட்டன் சேலைகள் | புவிசார் குறியீடு எண் 57/2007 நாள் 25.04.2007 | 60 பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் |
| 6 | ஆரணி பட்டு சேலைகள் | புவிசார் குறியீடு எண் 58/2007 நாள் 25.07.2007 | 04 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் |
| 7 | கண்டாங்கி சேலைகள் | புவிசார் குறியீடு எண் 422/2019 நாள் 30.08.2019 | 01 பருத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 8 | திருபுவனம் பட்டு சேலைகள் | புவிசார் குறியீடு எண் 342/2019 நாள் 15.04.2019 | 02 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் |

கோயம்புத்தூர் நெகமம் சேலைகள், திருநெல்வேலி செடிபுட்டா சேலைகள் மற்றும் திருச்சி உறையூர் பருத்தி சேலைகள் புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## 6.3 கைத்தறி மற்றும் பட்டு உற்பத்தி இரகங்களை மேம்படுத்துவதற்கான முத்திரை சான்றிதழ்கள்

இத்திட்டத்தின் கீழ் கைத்தறி மற்றும் பட்டு உற்பத்தி இரகங்களின் நம்பகத்தன்மையினை உறுதி செய்வதற்கும் மற்றும் பிரத்யேக அடையாளத்தை வழங்குவதற்காகவும் இந்திய அரசு கைத்தறி முத்திரை, பட்டு முத்திரை மற்றும் இந்திய கைத்தறி வணிகச் சின்னம் ஆகியவற்றை நடைமுறைபடுத்தியுள்ளது.

## 1. கைத்தறி முத்திரை

கைத்தறி தயாரிப்புகளுக்கு பிரத்யேக அடையாளத்தை உருவாக்கவும், உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதன் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும், 28.06.2006 அன்று ஒன்றிய அரசால் "கைத்தறி முத்திரை திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2. பட்டு முத்திரை

உள்நாடு மற்றும் சர்வதேச சந்தையில் தூய்மையான மற்றும் இயற்கையான பட்டு உற்பத்தி இரகங்களை மேம்படுத்துவதற்காக 17.04.2004 அன்று

ஒன்றிய அரசால் "பட்டு முத்திரை திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது.

## 3. இந்திய கைத்தறி வணிகச் சின்னம்

INDIA HANDLOOM

"இந்திய கைத்தறி" வணிகச் சின்னம், 7 ஆகஸ்ட் 2015 அன்று முதல் தேசிய கைத்தறி தின விழாவின்போது ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. மூலப்பொருட்கள், பதனிடுதல், நெசவு, வடிவமைப்பு மற்றும் இதர கைத்தறி பொருட்களின் தரத்தை அங்கீகரிக்கவும் புதிய வடிவமைப்புகளில் சுற்றுச்சூழல் பாதிக்காத நேர்த்தியான கைத்தறி இரக உற்பத்தியை உறுதி செய்யும் நோக்கத்தில் இந்திய அரசினால் இவ்வணிகச் சின்னம் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் கீழ்கண்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பதிவு செய்துள்ளனர்:

| வ. எண். | முத்திரை | பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் / தனிநபர்களின் எண்ணிக்கை | கொள்முதல் செய்யப்பட்ட வில்லைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கைத்தறி முத்திரை | 8,700 | 4.68 கோடி |
| 2. | பட்டு முத்திரை | 1,211 | 16.41 இலட்சம் |
| 3. | இந்திய கைத்தறி வணிகச் சின்னம் | 166 | -- |

## 7. பயிற்சி

### 7.1 துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி

கைத்தறி நெசவாளர்கள், வடிவமைப்பாளர்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், சென்னை, கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை, நெசவாளர் சேவை மையம்,

சர்தார் வல்லபாய்பட்டேல் சர்வதேச மேலாண்மை பயிற்சி நிலையம், கோயம்புத்தூர், தேசிய தகவல் மையம், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை ஆகிய நிறுவனங்களில் தேவையின் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சித் திட்டங்களில் பங்கேற்பாளர்களை அறிவு திறன் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை அடைய செய்து அதனை அவர்களின் அன்றாட பணி செயல்பாடுகளில் பயன்படுத்திட வழிவகை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## 7.2 சமர்த் திட்டம்

சமர்த் திட்டம், ஜவுளித் துறையில் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. ரூ.196.14 இலட்சம் மதிப்பீட்டில் கைத்தறித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் காஞ்சிபுரம், ஈரோடு, கும்பகோணம், பரமக்குடி ஆகிய 4 பயிற்சி நிறுவனங்கள் மூலம் 1,400 பயனாளிகளுக்கு "கைத்தறி நெசவு" பயிற்சி அளிக்க

ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகம், பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை 1400லிருந்து 607 ஆக மாற்றியமைத்து, 31.03.2024க்குள் பயிற்சியை நிறைவு செய்யப்பட வேண்டும் என பயிற்சிக்கான செலவினத் தொகை ரூ.58.84 இலட்சம் முதற்கட்டமாக விடுவித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், இதுவரை 371 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவர்களுக்கு பின்வருமாறு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது:-

| வ. எண் | பயிற்சி மையத்தின் பெயர் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | திருத்தப் பட்ட இலக்கு | ஏற்கனவே பயிற்சி பெற்றவர் | பயிற்சி அளிக்க வேண்டிய எண்ணிக்கை |
| 1. | காஞ்சிபுரம் | 87 | 43 | 44 |
| 2. | ஈரோடு | 220 | 160 | 60 |
| 3. | கும்பகோணம் | 150 | 84 | 66 |
| 4. | பரமக்குடி | 150 | 84 | 66 |
| | மொத்தம் | 607 | 371 | 236 |



**ஈரோடு பயிற்சி மையத்தில் சமர்த் திறன் மேம்பாட்டு பயிற்சி**

## 7.3 வடிவமைப்பு திறன் மேம்பாடு பயிற்சி

துறையின் வடிவமைப்பு மேம்பாடு முயற்சியின் ஒரு பகுதியாக கைத்தறி இரகங்களில் சந்தைப்படுத்த கூடிய இரகங்களை உற்பத்தி மேற்கொள்ள ஏதுவாக கைத்தறி இரகங்கள் உற்பத்தியில் நவீன காலத்திற்கேற்ற நவநாகரீக வடிமைப்புகளை புகுத்தும் பொருட்டு சென்னை மற்றும் பெங்களூருவில் அமைந்துள்ள தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனங்களுடன் 500 புதிய வடிவமைப்புகள்

உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை மற்றும் பெங்களூரு தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனத்தால் கீழ்க்கண்டவாறு வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது:

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | வடிவமைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம், சென்னை | 16 புதிய வடிவமைப்புகள்<br>(சேலைகள் – 8,<br>ஸ்டோல்கள் – 8) |
| 2 | தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம், பெங்களூரு | 400 புதிய வடிவமைப்புகள்<br>(வீட்டு அலங்கார துணிகள் – 100<br>படுக்கை விரிப்புகள் – 40<br>போர்வைகள் – 40<br>ஜமக்காளம் – 20<br>பட்டு சேலைகள் – 100<br>பருத்தி & கோரா சேலைகள் – 100) |

மேலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கோ–ஆப்டெக்ஸ் மற்றும் குழுமங்களில் உள்ள 44 வடிவமைப்பாளர்களுக்கு தேசிய வடிவமைப்பு நிறுவனம், அகமதாபாத் மூலம் 8 ஆகஸ்ட் 2022 முதல்

19 ஆகஸ்ட் 2022 முடிய வடிவமைப்பு திறன் மேம்பாடு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் இரகங்களில் பல்வேறு வகையான வடிவமைப்புகள் மற்றும் வண்ணக்கலவைகள் கொண்டு நேர்த்தியான பருத்தி மற்றும் பட்டு இரகங்களை உருவாக்க பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் கலந்து கொண்ட வடிவமைப்பாளர் ஒவ்வொருவரும் தலா 10 புதிய வடிவமைப்புகள் வீதம் 440 புதிய வடிவமைப்புகள் உருவாக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

துறையின் வடிவமைப்பு மேம்பாடு திட்டத்தின்படி உருவாக்கப்பட்ட 1,000 புதிய வடிவமைப்புகளை கொண்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிய இரகங்களில் வணிக உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றன.

தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனங்களின்

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு வளர்ச்சித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய வடிவமைப்புகளை கொண்டு சந்தை இரகங்கள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




**2022 ஆகஸ்ட் 8 முதல் 19 வரை ஈரோட்டில் நடைபெற்ற தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் பயிற்சி**

## 8. தகவல் தொழில்நுட்ப முனைப்புகள்

அரசின் சேவைகள் வெளிப்படைத் தன்மையுடனும், குடிமக்கள் எளிதில் அணுகக்கூடியதாகவும், துறையால் பின்வரும் தகவல் தொழில்நுட்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 8.1 இ–சேவை வழங்குதல்

நெசவாளர்கள் நலனுக்காக கைத்தறி துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பின்வரும் நெசவாளர் நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசின் மின்னனு சேவை மையங்கள் மற்றும் பொது சேவை மையங்கள் வாயிலாக பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.


1. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்
2. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம்
3. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்
4. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா.
5. டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை மூலம் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்.

## 8.2 நெசவாளர் குறை தீர்க்கும் மையம்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் கைத்தறி ஆணையரகத்தில் நெசவாளர் குறை தீர்க்கும் மையம் 23.03.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தேசிய தகவல் தொழில்நுட்பவியல் மையத்தின் (NIC) மூலம் நெசவாளர் குறை தீர்க்கும் மையத்திற்கென பிரத்யேகமாக மனுக்கள் செயலாக்க இணையதளம் உருவாக்கப்பட்டு https://gdp.tn.gov.in/dhl என்ற இணையதள முகவரியில் பயன்பாட்டில் உள்ளது.

## 8.3 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை முழுமையாக கணினிமயமாக்கல்

தேசிய தகவலியல் மையம் (NIC) மூலமாக ரூ.50.00 லட்சம் செலவில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்க மென்பொருள் உருவாக்கப்படுகிறது.




**உருவாக்கப்பட்ட தொகுப்பேடுகள்**

**மென்பொருள் உருவாக்கத்தின் முன்னேற்றம்**

- விற்பனை தொகுதி
- கணக்குத் தொகுதி
- அறிக்கை உருவாக்கம்
- பயனர் ஏற்றுக்கொள்ளும் சோதனை பாதுகாப்பு தணிக்கை இணக்கம்
- பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு

மேற்காணும் மென்பொருள் வடிவமைப்பு பணிகள் ஏப்ரல் 2023–க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நெசவாளர் கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு மேற்கண்ட மென்பொருளைப் பற்றிய பயிற்சியினை தேசிய தகவலியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுனர்களால் அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.4 மின்வணிக இணையதளம்

கைத்தறி இரகங்களை இணையவழியில் விற்பனை செய்வதை ஊக்குவிக்கவும், வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான கைத்தறி இரகங்களை தங்கள் இருப்பிடத்தில் இருந்து வாங்குவதற்கு வசதியாகவும், https://loomworld.in என்ற பிரத்யேக மின்வணிக இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், மென்பட்டு மற்றும் வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள் உள்ளிட்ட அனைத்து கைத்தறி இரகங்களும் இந்த இணையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மின்வணிக இணையதள தொழில்நுட்ப வசதியின் காரணமாக கைத்தறி இரகங்கள் விற்பனை செய்வது ஊக்குவிக்கப்படுகிறது.

2022–23 ஆம் ஆண்டில் ரூ.6.18 இலட்சம் மதிப்பிலான கைத்தறி இரகங்கள் லூம்வேர்ல் மின்வணிக இணையதள மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 8.5 தமிழ்நாட்டின் பாரம்பரிய கைத்தறி வகைகளை மின்னணுமயமாக்கி ஆவணப்படுத்துதல்

"தமிழ்நாட்டின் பாரம்பரிய கைத்தறி பொருட்கள் மற்றும் புவிசார் குறியீட்டில் பதிவு செய்யப்பட்ட கைத்தறி இரகங்களை மின்னணு மயமாக்கி ஆவணப்படுத்துதல் திட்டம்" ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் நிறைவு பெற்று, தகுதி வாய்ந்த நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் புவிசார் குறியீட்டில் பதிவு செய்யப்பட்ட 8 கைத்தறி இரகங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பாரம்பரிய 45 கைத்தறி தயாரிப்புகளையும் மின்னணுமயமாக்கி ஆவணப்படுத்தப்படும்.

## 8.6. கைத்தறி துறைக்கென தனி இணையதளம் உருவாக்குதல்

அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் மக்களுக்கு எளிதில் சென்றடைய வேண்டும். அதன்படி, துறை மற்றும் துறைசார் நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் சேவைகள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் குடிமக்களுக்கு அணுகக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

கைத்தறி துறைக்கென பிரத்யேக இணையதளத்தை உருவாக்கி அதனை வழங்கும் பணியில் துறை ஈடுபட்டுள்ளது.

இணையதளத்தின் பொருளடக்க மேலாண்மை கட்டமைப்பானது (Content Management Framework) இந்திய அரசின் இணையதள வழிகாட்டுதல்களின்படி (Guidelines for Indian Government Website) உருவாக்கப்பட்டு, இருமொழிகளில் தகவல்கள் அளிப்பதாகவும்,

பார்வையற்ற நபர்கள் அணுகக்கூடிய வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தில் உரிய நேரத்தில் இணைய மேம்பாட்டை உறுதி செய்ய பொருளடக்க மேலாண்மை அமைப்பு (Content Management System) உள்ளது.

துறையின் அனைத்து திட்டங்கள் மற்றும் சேவைகளையும் முழுமையான மின்னனு மயமாக்கி, விரிவான இணைய முகப்பாக உருவாக்குவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

## 9. துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 9.1 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்(வரையறுக்கப்பட்டது) கோ–ஆப்டெக்ஸ், சென்னை.

தமிழ்நாட்டின் அனைத்து இல்லங்களிலும் பிரபலமாக விளங்கும் "கோ–ஆப்டெக்ஸ்" தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் என்பதின் வணிக முத்திரை பெயராகும். கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் முதன்மையான மாநில

தலைமை கூட்டுறவு நிறுவனமாக 1935ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள நெசவாளர்களின் நலனுக்காகவும், கைத்தறி தொழிலினை மேம்படுத்துவதிலும் சிறந்த பங்களிப்பினை அளித்து வருகிறது.

இந்தியாவின் மிகப் பெரிய மாநில தலைமை கைத்தறி கூட்டுறவு சங்கமான கோ–ஆப்டெக்ஸ், தமிழ்நாடு முழுவதும் உள்ள நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களால் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகளை கோ–ஆப்டெக்ஸ் என்ற வணிக முத்திரையில் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னனி நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது. பட்டு மற்றும் பருத்தி வகைகளின் பாரம்பரிய மற்றும் நாகரீக சமகால வடிவமைப்புகளை கொண்டு சிறந்த கைத்தறி இரகங்களின் சின்னமான பெயராக கோ–ஆப்டெக்ஸ் மாறியுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் பல தலைமுறைகளாக நாடு முழுவதும் அதன் முக்கியத்துவத்தை நிலை நிறுத்தியுள்ளது, ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம், துபாய் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் அதன் உலகளாவிய வணிகத்தை நிறுவ முயற்சித்து வருகிறது. கோ–ஆப்டெக்ஸின் வணிக சின்னமான, வண்ணமயமான வண்ணத்துப்பூச்சி, அதன் வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் நியாயமான வர்த்தக நடைமுறைகளை செயல்படுத்தி வருகிறது. ஒப்பற்ற அழகியல் தரத்துடன், தமிழ்நாட்டின் வரலாற்று நெசவு பாரம்பரியத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்யும் அதிக திறன் கொண்ட நெசவாளர்களால் மட்டுமே இது சாத்தியமானது. இன்று, கோ–ஆப்டெக்ஸ், தமிழ்நாடு நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பை வழங்குவதன் மூலம் ஒரு சிறந்த சமூக நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மிக உயர்ந்த கைத்தறி பராம்பரியத்தை பிரதிபலித்து வருகின்றது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகை காலங்களில் புதிய வடிவமைப்புகள் கொண்ட இரகங்களை வெளிக்கொணர்ந்து வாடிக்கையாளர்களின் நெஞ்சங்களை எப்போதும் கவர்ந்து வருகிறது. கோ–ஆப்டெக்ஸின் அனைத்து கைத்தறி தயாரிப்புகளும் அகில இந்திய அளவில் முக்கிய நகரங்கள் மற்றும் ஊர்களில் உள்ள சந்தை மையங்களில் அமைந்துள்ள 154 விற்பனை நிலையங்களின் மூலம் விற்பனை செய்து வருகிறது. கோ–ஆப்டெக்ஸ், இளைய தலைமுறை வாடிக்கையாளர்களுக்கு தேவையான வடிவமைப்புகளை உருவாக்கி அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதுடன், NIFT மற்றும் NID அகமதாபாத் வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட பாரம்பரிய பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் புதுமையான கருப்பொருட்கள் கொண்ட

வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களுடன் மதிப்பு கூட்டப்பட்ட இரகங்களை விரிவுபடுத்தி வருகிறது.

**கோ–ஆப்டெக்ஸின் நோக்கங்கள்**

88 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்காணும் உயர் நோக்கங்களை செயல்படுத்தி வருகிறது.

1. கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் உருவாக்குதல்.
2. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சந்தை ஆதரவிற்கு உறுதுணையாக இருந்து, கைத்தறி இரகங்களை பிரபலப்படுத்துதல்.
3. வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கேற்ப பாரம்பரியம் மற்றும் புதுமையுடன் கூடிய இரகங்களை உருவாக்குதல்.
4. கைத்தறி தயாரிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் பல்வேறு புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துதல்.

**கோ–ஆப்டெக்ஸ் செயல்படுத்தி வரும் அரசின் திட்டங்கள்**

தனது செயல்பாட்டின் ஒரு பகுதியாக அரசு செயல்படுத்தும் திட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டு அரசு திட்டங்களை செயல்படுத்தி வரும் முகமை நிறுவனமாகவும் கோ–ஆப்டெக்ஸ் விளங்குகிறது.


1. முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கு வருவாய்த்துறையின் மூலம் வேட்டி சேலை வழங்கும் திட்டம்.
2. வேட்டி சேலை வழங்கும் திட்டம்
3. விலையில்லா சீருடை வழங்கும் திட்டம்

**விற்பனை விவரங்கள் மற்றும் செயல்பாடுகள்:**

2022–23 ஆம் ஆண்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.200.92 கோடி மதிப்பிற்கு சில்லரை விற்பனை செய்துள்ளது. இது கடந்த 2021–22ஆம் ஆண்டு நடைபெற்ற ரூ. 171.90 கோடி மதிப்பிலான

விற்பனையை விட ரூ. 29.02 கோடி அதிகமாகும். ஆண்டு முழுவதும் தொடர் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், புதிய விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டும், விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தி அதன் பொலிவை மேம்படுத்தியதாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறி துணிகளை NID/NIFT வடிவமைப்பாளர்களைக் கொண்டு புதிய இரகங்களை அறிமுகப்படுத்தியது மற்றும் விற்பனை நிலையத்தில் உள்ள பணியாளர்களுக்கு வேலைப்பயிற்சி மற்றும் ஊக்குவித்தல் பயிற்சியின் மூலமாகவும் இந்த விற்பனையை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்தியுள்ளது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமானது பெருமளவு இளைய தலைமுறை வாடிக்கையாளர்களை முகநூல் மற்றும் பல்வேறு சமூக வலைதளங்களை பயன்படுத்தி விளம்பரம் செய்ததன் மூலமாக முதன்முறையாக கைத்தறி துணிகளை வாங்கும் இளைய தலைமுறை வாடிக்கையாளர்களை பெருமளவில் சேர்த்துள்ளது.







**தீபாவளி 2022 விற்பனை துவக்கவிழா, தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, சென்னை**

## மின் வணிகம் விற்பனை

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் www.cooptex.com என்ற வலைதளத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் இணையதளத்தின் மூலம் வாங்குவதற்கு வழிவகை

செய்துள்ளது. கோ–ஆப்டெக்ஸ் இந்தியாவிலேயே முதல் தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கமாக, அதன் சொந்த இணைய வலைதளத்தில் மின் வணிகத்தை செயல்படுத்தி வெற்றிகரமாக மின்வணிகம் செய்து வருகின்றது. மின் வணிக விற்பனை தொடங்கியது முதல் இதுவரை ரூ.8.25 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.




**தேசிய கைத்தறி கண்காட்சி 2022**

10 ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய கைத்தறி கண்காட்சி 2022 சென்னையிலுள்ள கோ–ஆப்டெக்ஸ் கண்காட்சி வளாகத்தில்

நடைபெற்றது. இந்த கண்காட்சி 08.04.2022 முதல் 01.05.2022 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் 100க்கும் மேற்பட்ட விற்பனையகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 வெளி மாநிலங்களைச் சேர்ந்த கைத்தறி சங்கங்கள் பங்கேற்று ரூ.3.52 கோடி மதிப்பிலான துணி இரகங்கள் விற்பனை செய்யப்பட்டன.




**தேசிய கைத்தறி கண்காட்சி 2022 துவக்கவிழா**

**வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் செயல்படுத்திவரும் விற்பனை முன்னேற்ற திட்டங்கள்**

**கோ-ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்புத் திட்டம்**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரபலமான "கோ-ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்புத் திட்டத்தினை" செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள், குறைந்தபட்சம் ரூ.300/- முதல் மாதத் தவணையாக செலுத்தலாம். வாடிக்கையாளர்கள் 11 தவணைகள் செலுத்திய பிறகு 12வது தவணை தொகையை கோ-ஆப்டெக்ஸ் ஊக்கத் தொகையாக செலுத்தும் இத்திட்டத்தில் வாடிக்கையாளர்கள் 48 சதவிகிதம் கூடுதல் பலன் பெறுகின்றனர். இத்திட்டம் புதிய வாடிக்கையாளர்களை அதிகரிக்கவும், கோ-ஆப்டெக்ஸிற்கு நிலையான நிதி வரவை மேம்படுத்தும் வகையில் இத்திட்டத்தின் மூலம் ரூ.9.64 கோடி மதிப்பிற்கு 2022-23ஆம் ஆண்டில் விற்பனை நடைபெற்றுள்ளது.

## பட்டுத் திருவிழா

பட்டுச் சேலைகள் விற்பனையை அதிகரிக்கவும் இதன் மூலம் கோ–ஆப்டெக்ஸின் விற்பனையை பெருக்கும் பொருட்டு கோ–ஆப்டெக்ஸ் "பட்டுத் திருவிழா" சென்னை தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, சேலம் தங்கம் பட்டு மாளிகை மற்றும் கடலூர் முல்லை விற்பனை நிலையங்களில் பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023ல் நடைபெற்றது. இந்த பட்டுத் திருவிழா விற்பனையில் ரூ. 135.27 இலட்சம் மதிப்பிலான துணிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

## கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்

"கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்" ஏற்றுமதி பிரிவானது பல்வேறு ஆக்கப்பூர்வமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏற்றுமதி விற்பனையினை அதிகரிக்க செயல்பட்டு வருகிறது. ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலி, பிரான்சு, சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து

மற்றும் இதர நாடுகளுக்கு தனது துணி இரகங்களை கோ–ஆப்டெக்ஸ் ஏற்றுமதி செய்து வருகிறது. கைத்தறி வீட்டு உபயோக இரகங்களான போர்வைகள், மேஜை விரிப்புகள், சமையலறை துணி வகைகள், குளியலறை இரகங்கள் , கலம்காரி துப்பட்டாக்கள், நாகரீக பைகள் முதலியவற்றை கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் மூலம் ஏற்றுமதி செய்து வருகிறது.

**சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்பு**

கைத்தறி பொருட்களை சர்வதேச சந்தைகளில் பிரபலப்படுத்துவதற்காக 2022–2023ஆம் ஆண்டில் கீழ்க்காணும் நேரடி வெளிநாட்டு ஜவுளி கண்காட்சிகளில் கோ–ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் பங்கேற்றது.

| வ.எண் | கண்காட்சியின் பெயர் | காலம் |
|---|---|---|
| 1. | வீட்டு உபயோக ஜவுளி கண்காட்சி, இஸ்தான்புல், துருக்கி | 17 – 21 மே 2022 |

| வ.எண் | கண்காட்சியின் பெயர் | காலம் |
|---|---|---|
| 2. | ஹெய்ம் டெக்ஸ்டைல்ஸ் ஜவுளி கண்காட்சி, பிராங்பர்ட், ஜெர்மனி | 21 – 24 ஜுன் 2022 |
| 3. | சர்வதேச ஆயத்த ஆடை மற்றும் ஜவுளி கண்காட்சி, துபாய் | 28 –30 நவம்பர் 2022 |
| 4. | ஹெய்ம் டெக்ஸ்டைல்ஸ் ஜவுளி கண்காட்சி, பிராங்பர்ட், ஜெர்மனி | 10 – 13 ஜனவரி 2023 |

மேற்கண்ட கண்காட்சிகளில் பங்கேற்று சுமார் ரூ.100 இலட்சம் மதிப்பிற்கு ஜெர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம் மற்றும் புதிய வியாபார வாய்ப்பாக ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து புதிய இரகங்களான குளியல் அறை துண்டுகள், குளியல் அங்கிகள், கலம்காரி துப்பட்டாக்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்ய ஆணைகள் பெறப்பட்டுள்ளது. இக்கண்காட்சிகளில் பங்கேற்றதன்

மூலம் எதிர்காலத்தில் விற்பனை ஆணைகள் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

**அரசு திட்டங்களின் செயல்பாடுகள்**

**1. வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டம் பொங்கல் – 2023**

வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கோ–ஆப்டெக்ஸ் ஒரு முகமை நிறுவனமாக செயல்பட்டு 90.21 இலட்சம் எண்ணிக்கையிலான சேலைகள் மற்றும் 105.56 இலட்சம் எண்ணிக்கையிலான வேட்டிகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு விநியோகம் செய்துள்ளது.

**2. பள்ளிச் சீருடைத் துணி வழங்கும் திட்டம்**

பள்ளிச் சிறார்களுக்கு, சீருடைத் துணி வழங்கும் திட்டத்தின் கீழ் முகமை நிறுவனங்களில் ஒன்றாக கோ–ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. மாணவர்கள் கால்சட்டை இரகங்கள் 64.91 இலட்சம் மீட்டர்,

மாணவிகள் கால்சட்டை துணி ரகம் 97.21 இலட்சம் மீட்டர் மற்றும் சட்டை துணி 107.72 இலட்சம் மீட்டர் சமூக நலத்துறைக்கு 2022-23 ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் விநியோகம் செய்துள்ளது.

3. **முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம்**

முதியோர் ஓய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம் தீபாவளி 2022 மற்றும் பொங்கல் 2023-ன் பணிகளுக்கான முகமை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. தீபாவளி 2022-க்கு 24.37 இலட்சம் சேலைகளும், 9.50 இலட்சம் வேட்டிகளும் மற்றும் பொங்கல் 2023-க்கு 24.43 இலட்சம் சேலைகளும், 9.49 இலட்சம் வேட்டிகளும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

**புதிய வடிவமைப்புகள் அபிவிருத்தி**

புதிய இரக அபிவிருத்தி செயல்பாட்டின் ஒரு பகுதியாக, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் NID/NIFT போன்ற புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்ற எட்டு பகுதிநேர வடிவமைப்பாளர்களை ஈடுபடுத்தி, அவர்களை கீழ்கண்ட உற்பத்தி மண்டலங்களில் பணியமர்த்தியுள்ளது.

| வ. எண் | பகுதியின் பெயர் |
|---|---|
| 1. | கோயம்புத்தூர் |
| 2. | சேலம் |
| 3. | காஞ்சிபுரம் |
| 4. | தஞ்சாவூர் |
| 5. | மதுரை |
| 6 | ஈரோடு |

இவ்வாறு பணியமர்த்தப்பட்ட வடிவமைப்பாளர்கள் பட்டுப் புடவைகள், பருத்திப் புடவைகள், சுடிதார்கள், லுங்கிகள், துண்டுகள், பெட்ஷீட்கள், ஆயத்த சட்டைகள், கலம்காரி


அச்சிடப்பட்ட புடவைகள் / ஸ்டோல்கள் மற்றும் பெண்கள் நாகரீக ஆயத்த ஆடைகள் ஆகியவற்றில் புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ணக் கலவைகளை உருவாக்கியுள்ளனர். நடப்பு ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் மேற்கண்ட இரகங்களில் அனைத்து வகைகளிலும் 280 புதிய வடிவமைப்புகளை உருவாக்கியுள்ளது.

**சிறப்பு சேகரிப்பு தொகுப்பு புடவை இரகங்கள் அறிமுகம்**

வெளிச்சந்தையின் தேவைக்கு ஏற்ப வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களை மேம்படுத்தவும் மற்றும் பல்வேறு பிரிவு வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைக்கு தக்கவாறு இரகங்களை உற்பத்தி செய்து விற்பனையை அதிகரிக்க ஏதுவாக கடந்த தீபாவளி 2022 பண்டிகை விற்பனையின் போது சேலை வகைகளின் சிறப்பு சேகரிப்பு தொகுப்புகள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## 1. வடிவமைப்பாளர் இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

NID/NIFT போன்ற புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்ற வடிவமைப்பாளர்களால் உருவாக்கப்பட்ட வடிவமைப்புகள் இந்த வகை தொகுப்பில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.




வடிவமைப்பாளர் இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

## 2. தனித்துவமான இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

உயர்தர வாடிக்கையாளர்களை ஈர்க்கும் நோக்கில் வெளிச்சந்தை இரகங்களுக்கு போட்டி போடும் வகையில் தனித்துவமான வடிவமைப்புகள் கைத்தறியில் உருவாக்கப்பட்டு இந்த வகை தொகுப்பில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.




தனித்துவமான இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

### 3. பாரம்பரிய இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

கோ–ஆப்டெக்ஸின் நிறுவனத்தின் நிரந்தர வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாரம்பரிய கருப்பொருள்கள் மற்றும் வண்ணங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட வடிவமைப்புகள் கைத்தறியில் நெய்யப்பட்டு இந்த வகை தொகுப்பில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



பாரம்பரிய இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

## 4. விருது பெற்ற இரகங்களின் சேகரிப்பு தொகுப்பு

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசின் சிறந்த வடிவமைப்புகள், சிறந்த நெசவாளர்கள், சிறந்த வடிவமைப்பாளர்களுக்கான விருது பெற்ற சேலை இரகங்கள் இந்த வகை தொகுப்பில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.




விருது பெற்ற இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

**தோடா பழங்குடி மக்களின் தயாரிப்புகளின் அறிமுகம்**

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தோடா பழங்குடியினர் கை வேலைப்பாட்டுடன் கூடிய எம்பிராய்டரி துணி வகைகள் தயாரிப்பதில் திறமையானவர்கள். பழுப்பு வெள்ளை நிற துணியில் பெரும்பாலும் கருப்பு மற்றும் சிவப்பு வண்ணங்களில் எம்பிராய்டரி கை வேலைப்பாடு வடிவமைப்புகளுடன் கூடிய அவர்களின் தயாரிப்புகள் தனித்துவமானது. தற்போது அவர்களின் சந்தைப்படுத்தல் திறன் நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வரம்புக்குள் மட்டுமே அடங்கியுள்ளது.

பாரம்பரிய பழங்குடி கைவினைஞர்களை ஊக்குவிப்பதன் ஒரு பகுதியாகவும், பெரு நகரங்களில் வசிக்கும் உயர்தர வாடிக்கையாளர்களுக்கு தோடா பழங்குடியினரின் கை எம்பிராய்டரி இரகங்களை கொண்டு சேர்க்கும் முயற்சியாகவும், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தோடா தயாரிப்புகளான குஷன் கவர்கள், தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள், பைகள், மேலாடைகள், சால்வை இரகங்கள் மற்றும் பல்வேறு

உபயோகங்களுக்கான சிறிய பைகள் போன்றவற்றை கொள்முதல் செய்து கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வணிக வளாகத்தில் செயல்படும் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு காட்சிப்படுத்தியுள்ளது. இவை உயர்தர வாடிக்கையாளர்களை பெரிதும் ஈர்த்துள்ளன.



**பார்வை திறனற்ற பெண்களால் நெய்யப்பட்ட இரகங்களை கொள்முதல் செய்தல்**

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பார்வை திறனற்ற பெண்களால் கைத்தறியில் நெய்யப்படும் இரகங்களுக்கான விற்பனை ஆதரவு அளிக்கும் விதமாக சென்னையில் செயல்படும்

"சத்யஜோதி" பார்வை திறனற்றவர்களுக்கான பயிற்சி பட்டறை நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் பார்வை திறனற்ற பெண்களால் நெய்யப்படும் தரை துடைக்கும் துணிகளை மாதம் 300 எண்ணிக்கையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்ய உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பார்வை திறனற்ற பெண்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலை மேம்படவும் உதவுகிறது.

**புதிய விற்பனை நிலையங்கள் துவக்கம்**

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன், உத்திரபிரதேசம் மாநிலம் வாரணாசியிலும், தமிழ்நாட்டில் சென்னையில் தேனாம்பேட்டை. ஆவடி மற்றும் எழும்பூரில் கோ–ஆப்டெக்ஸ் பன்னாட்டு விற்பனை நிலையம் ஆக நான்கு புதிய விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்துதல்**

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் வாடிக்கையாளர் வருகையை அதிகரிக்கும் நோக்குடன், 2022–23ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஒன்பது விற்பனை நிலையங்கள் ரூ.483.00 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | விற்பனை நிலையம் | இடம் |
|---|---|---|
| 1 | மினர்வா விற்பனை நிலையம் | ஹைதராபாத் |
| 2 | கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் | பாட்னா |
| 3 | வண்ணம் விற்பனை நிலையம், பெரம்பூர் | சென்னை |
| 4 | முல்லை விற்பனை நிலையம் | கடலூர் |
| 5 | மடிப்பாக்கம் விற்பனை நிலையம் | சென்னை |
| 6 | குமரி விற்பனை நிலையம் | நாகர்கோவில் |
| 7 | கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் | கரூர் |
| 8 | பாலமுருகன் விற்பனை நிலையம் | கோயம்புத்தூர் |
| 9 | வசந்தம் விற்பனை நிலையம் | ஈரோடு |



கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், பாட்னா



கோ–ஆப்டெக்ஸ் பாலமுருகன் விற்பனை நிலையம், கோயம்புத்தூர்



கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், வாரணாசி



**கோ–ஆப்டெக்ஸ் பன்னாட்டு விற்பனை நிலையம், எழும்பூர், சென்னை**



கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், மடிப்பாக்கம், சென்னை



கோ–ஆப்டெக்ஸ் வண்ணம் விற்பனை நிலையம்,
பெரம்பூர், சென்னை



கோ–ஆப்டெக்ஸ் குமரி விற்பனை நிலையம், நாகர்கோயில்




கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், கரூர்




கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகம் முகப்புத்தோற்றம், எழும்பூர், சென்னை




கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகம் (உட்புறத்தோற்றம்), எழும்பூர், சென்னை

**புதிய முயற்சிகள்**

1. **கோ–ஆப்டெக்ஸ் "துணை துணி இரகங்கள்" விற்பனை நிலையம்**

கோ–ஆப்டெக்ஸின் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களின் வாங்கும் ஆர்வத்தை அதிகப்படுத்தும் வகையில் ஸ்டோல்ஸ், துப்பட்டாக்கள், குர்த்தீஸ், ரன்னர்கள், மேட் துணிகள், குசன் கவர்கள், நாகரீக பைகள் போன்ற துணை துணி இரகங்களை விற்பனை செய்வதற்கு **"கோ–ஆப்டெக்ஸ் துணை துணி இரகங்கள்"** விற்பனை நிலையம் கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகம் சென்னையில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. **"இந்தியாவின் கைத்தறி இரகங்கள்" விற்பனை நிலையம்**

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் தனித்துவமான கைத்தறி இரகங்களை ஒரே இடத்தில் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் வகையில்

**"ஹேண்ட் லூம்ஸ் ஆப் இந்தியா"** (இந்தியாவின் கைத்தறி இரகங்கள்) என்ற பெயரில் சென்னையில் புதிய விற்பனை நிலையம் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விற்பனை நிலையத்தில் கோ–ஆப்டெக்ஸின் உயர்தர வாடிக்கையாளர்கள் தங்கள் விருப்பப்படி அனைத்து மாநில கைத்தறி இரகங்களை ஒரே இடத்தில் வாங்க இயலும். இதனால் இந்தியா முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வை பேணவும் மற்றும் கைத்தறி தொழிலை மேம்படுத்தவும் இயலும்.

**உண்மையான கைத்தறி தயாரிப்புகளுக்கான அங்கீகாரம், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கண்டறியும் தன்மையை IoT தொழில்நுட்பம் மூலம் உறுதிபடுத்துதல்**

கைத்தறித் தயாரிப்புகள், அதிக எண்ணிக்கையில் எளிதில் கண்டுபிடிக்க இயலாதவாறு விசைத்தறியில் அதிக உற்பத்தி செய்யப்படும் போலியான தயாரிப்புகள் மூலம் போட்டி மற்றும் சவால்களை எதிர்கொள்கின்றன. புதுமையான

தொழில்நுட்பத்தை கொண்டு வருவதன் மூலம் உண்மையான கைத்தறி இரகங்களை அங்கீகரிக்கவும், மேற்கத்திய வளர்ந்த நாடுகளில் உள்ள உயர்தர வாடிக்கையாளர்களுக்கு அதிக மதிப்புள்ள கைத்தறி இரகங்களை கொண்டு சேர்க்கவும் வாய்ப்பு உள்ளது.

எனவே கைத்தறி தயாரிப்புகளை டிஜிட்டல் மயமாக்கல், கைத்தறி உற்பத்தியை அங்கீகரித்தல் மற்றும் கண்டறியும் தன்மை ஆகிய நோக்கத்துடன் ஒரு புதுமையான தொழில்நுட்ப IoT சாதனம் கைத்தறிகளில் நிறுவப்படவுள்ளது. முதற்கட்டமாக இந்தகைய IoT சாதனங்கள் ஏற்றுமதி இரகங்கள், அதிக மதிப்புள்ள பட்டு இரகங்கள் மற்றும் புவிசார் குறியீடு பெற்ற இரகங்கள் உற்பத்தியாகும் கைத்தறிகளில் பல்வேறு உற்பத்தி மண்டலங்களில் உள்ள 150 கைத்தறிகளில் நிறுவப்பட்டு வருகின்றது.

## 9.2 தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 1971–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1974–ஆம் ஆண்டு முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் ISO 9001:2015 தரச்சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். தமிழ்நாடு சரிகை ஆலையின் ISO 9001:2015 தரச்சான்றுக்கான காலமுறை தணிக்கை அக்டோபர் 2022–இல் நடைபெற்றுள்ளது.

இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவைப்படும் 75 சதவீத சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம், காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு" இயந்திரம் (X-Ray Fluorescence Analyser) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையை

கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் (Non–Destructive Testing Method) அவற்றில் உள்ள சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது.

இந்நிறுவனம் சரிகை உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருளான வெள்ளிப் பட்டிழையினையும், தங்கத்தையும் கொள்முதல் செய்து சரிகை உற்பத்தி செய்து வருகிறது.



**செங்குத்தான தங்க முலாம் பூசும் இயந்திரம்**




**தங்க இழை தட்டையாக்கும் இயந்திரம்**

தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தில் அரசு பங்கு முதலீடு ரூ.34.40 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் ஈட்டிய இலாபத்தில் 2021-22 வரை ரூ.219.84 இலட்சத்தினை ஈவுத்தொகையாக அரசுக்கு செலுத்தியுள்ளது.

## தமிழ்நாடு சரிகை ஆலையின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்பாடுகள்

| ஆண்டு | உற்பத்தி | உற்பத்தி மதிப்பு | விற்பனை | விற்பனை மதிப்பு | இலாபம் (வரிக்கு முன்) |
|---|---|---|---|---|---|
| | மார்க்கு களில் | ரூ. இலட்சத்தில் | மார்க்கு களில் | ரூ. இலட்சத்தில் | |
| 2018–19 | 31,415 | 3315.38 | 30,466 | 3,355 | 63.58 |
| 2019–20 | 30,461 | 3521.12 | 32,097 | 3,951 | 200.30 |
| 2020–21 | 20,950 | 3179.07 | 19,213 | 3,097 | 100.20 |
| 2021–22 | 22,386 | 3490.79 | 24,340 | 4,049 | 177.49 |
| 2022–23 | 28,995.75 | 4601.95 | 28,578 | 4,858.68 | 213.20* |

* (உத்தேசமாக)



தங்கமூலாம் பூச்சு பிரிவில் பயன்படுத்தப்படும் இரசாயனங்களுக்கு சூரத் விற்பனையாளர்களை நம்பியிருக்கும் நிலைமையை தவிர்க்கும் பொருட்டு, ஜரிகையின் தரம் மற்றும் நிறத்தினை மேம்படுத்த சென்னை அண்ணா பல்கலைக்கழக தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு ஆலையிலேயே இரசாயனம் தயாரிக்க திட்டம் மேற்கொள்ளப்பட்டு வணிகரீதியான உபயோகத்திற்கு விரைவில் பயன்படுத்தப்படும்.

தமிழ்நாடு சரிகை ஆலையின் தொழிற்சாலை மற்றும் அலுவலகம் ஆகிவற்றை ரூ.1.41 கோடி மதிப்பில் புணரமைப்பு செய்ய கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**2023–24 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

- சரிகையின் நிறம் மற்றும் பளபளப்பினை மேம்படுத்துவற்காக ரூ.24.50 இலட்சம் மதிப்பில் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இரண்டு தங்கமூலாம் பூச்சு இயந்திரங்கள் (Vertical type

Gilding machines with improved Rectifiers) நிறுவப்படவுள்ளது.

- ரூ.1.65 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட தட்டை செய்யும் தொழில்நுட்பம் மற்றும் தானியங்கி எடை கருவி பொருத்திய புதிய சரிகை தட்டை செய்யும் இயந்திரம் நிறுவப்படவுள்ளது.

- மூன்று தங்கமூலாம் பூச்சு இயந்திரங்களில் தற்போது கேத்தோடு ஆக பயன்படுத்தப்பட்டு வரும் துளையிடப்பட்ட எஃகு தகடுகளுக்கு பதிலாக புதிய பிளாட்டினம் கம்பிகள் பொருத்தப்படவுள்ளது. இதன்மூலம் வெள்ளி பட்டியிழையின் மீது சீரான முறையில் தங்க பூச்சு நடைபெறும்.

## 9.3 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிட், ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 06.07.1973–ல் பதிவு செய்யப்பட்டு 05.09.1973 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாலை துணி வெளுத்தல்,


சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 23.00 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கும் சீருடைத் துணிகளையும் கேரள அரசின் சீருடைத் திட்ட துணிகளையும் பதனிடும் பணிகளை செய்து வருகிறது. மேலும் கோ–ஆப்டெக்ஸ், தேசிய பஞ்சாலைக் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயமுத்தூர், சிறைச்சாலைத் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கேரளா மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், கேரளா கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகிய நிறுவனங்களின் துணிகளை பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்**

பூஜ்ய கழிவு நீர் என்ற நிலையினை அடைய, ஆலையில் கழிவு நீர் மேலாண்மையுடன் கூடிய எதிர் சவ்வூடு பரவல் முறையினை பயன்படுத்தி துணிகள் தரமான முறையில் பதனீடு செய்வதுடன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி சூரிய ஆவியாக்கல் முறையினை தவிர்த்து, தற்போது போர்ஸ்டு சர்குலேசன் எவாப்பரேட்டர் (FCE) மற்றும் அஜிடேட்டட் தின் பிலிம் டிரையர் (ATFD) ஆகிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாலை, 2022-23 ஆம் ஆண்டில் 180.10 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிட்டு ரூ.36.41 கோடி அளவிற்கு வணிகம் மேற்கொண்டு ரூ.8.75 கோடி உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது.




## 2023-24 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்


- ஆலையின் உற்பத்தி திறன் ஒரு நாளுக்கு 90,000 மீட்டரிலிருந்து 1,20,000 மீட்டர் என்ற அளவில் அதிகரிக்கும் பொருட்டு புதிய ஸ்டெண்டர் இயந்திரம் நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு 31.20 இலட்சம் மீட்டர் துணிகள் பதனிட வாய்ப்புள்ளது.

- இவ்வாலையானது 2023-24 ஆம் ஆண்டு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் 173.00 இலட்சம் மீட்டர்கள் மற்றும் இதர நிறுவனங்களின் துணிகள் 27.00 இலட்சம் மீட்டர்கள் என மொத்தம் 200.00 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிட செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

- மேலும் ஆலையில் மெஷின் ஹால்களின் தரைதளம் மற்றும் நடைபாதை சீரமைக்க ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட உள்ளது.



தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் மடிப்பு இயந்திரம்



தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் வெட்டுதல் மற்றும் சரிபார்த்தல்

## 9.4 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் (TNHDC), சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட் ஒரு மாநில பொதுத் துறை நிறுவனமாகும், இது 1964 ஆம் ஆண்டில் அதன் செயல்பாட்டைத் தொடங்கியது, கூட்டுறவு அமைப்பின் கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதன உதவியை வழங்கி, சேவை செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் பங்கு மூலதனம் பின்வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| அ) பங்கு மூலதனம் | | |
| (i) | அரசு | 267.00 |
| (ii) | உறுப்பினர்கள் | 162.24 |
| மொத்தம் பங்கு மூலதனம் | | 429.24 |
| ஆ) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட கடன் | | 504.15 |
| **மொத்தம் (அ + ஆ)** | | 933.39 |

தற்போது நெசவாளர்களிடம் இருந்து நிலுவையில் உள்ள கடனை வசூலிப்பது தொய்வடைந்துள்ள காரணத்தால் பின்வரும் திட்டங்களின் செயல்பாடுகளுக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் முகமை / செயலாக்க நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

1) திருச்சி மெகா கைத்தறி குழுமம்
2) விருதுநகர் மெகா கைத்தறி குழுமம்
3) தேசிய / மாநில அளவிலான கைத்தறி கண்காட்சிகளை நடத்துதல்
4) சந்தைப்படுத்துதல் ஊக்கத் திட்டம்
5) கைத்தறி ஆதரவு திட்டம்
6) லூம்வேர்ல்ட் என்ற பிராண்டின் கீழ் கைத்தறி பொருட்களை இ–ஷாப்பிங் மூலம் சந்தைப்படுத்துதல்
7) சேலைகள் மற்றும் வேட்டிகள் திட்டத்திற்கான முகமை நிறுவனம்
8) சீருடை துணிகள் விநியோக திட்டத்தின் கீழ் முகமை நிறுவனங்களில் ஒன்றாக செயல்படுகிறது
9) லூம்வேர்ல்டிற்கான ஒற்றை முகமை நிறுவனம்

**லூம்வேர்ல்ட்**

பட்டு சேலைகள், மென்மையான பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், கோரா பருத்தி சேலைகள் உள்ளிட்ட தரமான கைத்தறிப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு பொதுவான பெயரை வழங்குவதற்கும், சந்தைப்படுத்துதலை எளிதாக்குவதற்கும் 2000 ஆம் ஆண்டு 'லூம்வேர்ல்ட்' தொடங்கப்பட்டது. பட்டு வேட்டிகள், பருத்தி வேட்டிகள், பருத்தி லுங்கிகள் மற்றும் வீட்டு அலங்காரப் பொருட்கள் ஆகியவையும் லூம்வேர்ல்டில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லூம்வேர்ல்டு அமைப்பினை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் www.loomworld.in என்ற இணைய தளத்தில் 30.12.2015 அன்று இ–காமர்ஸ் வசதி தொடங்கப்பட்டது மற்றும் லூம்வேர்ல்டின் இ–ஷாப்பிங்

இணையதளம் மூலம் கைத்தறி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில் கழகத்தின் நிகர இலாபம் ரூ.10.65 இலட்சம் ஆகும். 2022-23 ஆம் ஆண்டில் உத்தேச நிகர இலாபம் ரூ.10.30 இலட்சமாக உள்ளது.

## 10. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

தமிழ்நாட்டில் நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரசால் உயர் நிலை குழு மற்றும் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கென பின்வரும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| இலக்கு 7 | அனைவருக்கும் கட்டுபடியாகக்கூடிய நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்திக்கான அணுகுமுறையினை உறுதிசெய்தல். |

| | |
|---|---|
| இலக்கு 8 | நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, முழுமையான உற்பத்தி திறன்மிக்க வேலைவாய்ப்பு மற்றும் அனைவருக்கும் நியாயமான வேலை ஆகியவற்றை ஊக்குவித்தல். |
| இலக்கு 9 | உறுதியான உட்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதிய முயற்சிகளை வளர்த்தல். |
| இலக்கு 11 | நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்தன்மை மற்றும் நிலையானதாக உருவாக்குதல். |

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான திட்டங்களை கண்காணிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், துறையால் "ஒருங்கிணைப்பு அலுவலர்" நியமனம் செய்யப்பட்டுள்ளது.

கைத்தறிகளில் வடிவமைப்புகளை உருவாக்குதல், தொழில்நுட்பத்தை புகுத்துதல், கைத்தறி துணிகளை சந்தைப்படுத்துதல், உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல் ஆகியவற்றின்

மூலம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் நெசவு உபதொழில் புரிபவர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பினை வழங்கி அதிகமான கூலி கிடைப்பதற்கு துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11. கைத்தறி துறையின் 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கைத்தறி துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.1133.41 கோடி மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023-24 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வேட்டி சேலை வழங்கும் திட்டம் | 20579.07 |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் | 729.65 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023–24 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் | 51367.28 |
| 4 | கைத்தறி ஆதரவுத் திட்டம் | 2000.00 |
| 5 | வட்டி மானியத் திட்டம் | 2160.00 |
| 6 | தள்ளுபடி மானியத் திட்டம் | 25000.00 |
| 7 | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 92.71 |
| 8 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் – பங்குத்தொகைகள் | 1200.00 |
| 9 | முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் | 3500.00 |
| 10 | மாநில அளவிலான சிறந்த நெசவாளர்கள் விருது | 20.41 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023–24 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 11 | சிறந்த ஏற்றுமதியாளர்கள் விருது | 1.00 |
| 12 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019–ன்கீழ் விசைத்தறியை மேம்படுத்துதல் | 0.01 |
| 13 | விசைத்தறி தொழில்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்கு நிதியுதவி அளித்தல் | 200.00 |
| 14 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | 8.01 |
| 15 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்புத் தொகை | 3200.01 |
| 16 | ஈரோட்டில் உள்ள விசைத்தறி சேவை மையத்திற்கு வாடகை மானியம் | 6.72 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023-24 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 17 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 2983.53 |
| 18 | அமலாக்கப் பிரிவின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 292.78 |
| 19 | இதர இனங்கள் | 0.03 |
| **மொத்தம்** | | **113341.21** |

# துணிநூல் துறை


## 1. முன்னுரை

இந்தியாவில் ஜவுளித் தொழிலானது, வேளாண் துறைக்கு அடுத்தபடியாக, திறன் மிக்க மற்றும் அனைத்து தரப்பு தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்குவதில் இரண்டாவது பெரிய தொழிலாகவும், உலகளவில் பருத்தி நூல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியிலும் இரண்டாவது பெரிய தொழிலாகவும் விளங்குகிறது.

2032 நூற்பாலைகள், 5.63 இலட்சம் விசைத்தறிகள், 1.55 இலட்சம் கைத்தறிகள் மற்றும் ஏறத்தாழ 15,000 ஜவுளித் தொழிற்சாலைகளுடன், பதனிடுதல் மற்றும் ஆடைத்தொழிலில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

துணிநூல் மற்றும் ஆடைத் தொழில்களில் இந்திய அளவில் தமிழ்நாடு பின்வரும் இனங்களில் முன்னணி மாநிலமாக விளங்குகிறது.

## இந்தியாவில் தமிழகத்தின் நிலை



# 2. துணிநூல் துறை

தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவின் மீது அதிக கவனம் செலுத்தி, ஜவுளித் துறைக்கு போதிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் வகையில், ஏற்கனவே செயல்பட்டு வந்த கைத்தறி மற்றும் துணிநூல் துறையை இரண்டாகப் பிரித்து, 2021 ஆம் ஆண்டில் "துணிநூல் துறை" என்ற புதிய துறையை உருவாக்கி தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

## 2.1. துணிநூல் துறையின் நோக்கங்கள்

துணிநூல் துறையானது பின்வரும் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயல்பட்டு வருகிறது.

- திறன்மிக்க தொழிலாளர்கள், பொருத்தமான நிலம் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதி உள்ளிட்ட ஏராளமான வளங்களைப் பயன்படுத்தி இழை முதல் நாகரிக ஆடை உற்பத்தி வரை, (from Fibre to Fashion), ஜவுளி இயந்திரங்கள் மற்றும்

உதிரிபாகங்கள், இவற்றுடன் ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) நிலையான வளர்ச்சியை எய்துதல்.

- தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தி திறன்களுக்கான விரிவாக்கத்தினை மேம்படுத்துதல்.
- ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) குறிப்பாக தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவில் சிறப்பு கவனம் செலுத்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதி ஜவுளிகளின் தரத்தை உறுதி செய்தல்.
- இத்துறையில் வெளிநாட்டினரின் முதலீடுகளுக்கான சிறந்த மற்றும் விருப்பமான இடமாக நமது மாநிலத்தை உருவாக்குதல்.
- சுற்றுச் சூழல், மக்கள் மற்றும் சமூகத்தின் மீதான பாதிப்பு சம்மந்தமான விதிமுறைகளுக்கு உட்பட்டு

நவீன தொழில்நு பங்களை (State–of–the–Art) பின்பற்றவும், சிறந்த உற்பத்திக்கான நடைமுறைகளை (Global Manufacturing Practices) பின்பற்றுவதற்கான செயலாக்கத்தில் உறுதுணையாக இருத்தல்.

- ஆடை வடிவமைப்பாளர்கள், வடிவமைப்பு நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய வணிக முத்திரைய பதித்தல் (Global Brands) போன்றவற்றை முறையான நிறுவன அமைப்புகளால் செயல்படுத்திட ஊக்குவித்தல்.

- ஆடை அலங்கார நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் நடத்தி, மாறிவரும் நாகரிகத்திற்கு ஏற்ப ஜவுளிச் சுற்றுலாவிற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.

- சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு, குறைந்த செலவிலான மற்றும் நிலையான ஜவுளி பதப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல்.

- வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள சாத்தியமான பகுதிகளில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைத்திட பன்னாட்டு தரத்துடன் கூடிய, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- மாநிலத்தின் ஜவுளி ஏற்றுமதி பங்கினை பன்மடங்காக உயர்த்துதல்.

## 2.2. துணிநூல் துறையின் அமைப்பு

துணிநூல் துறையானது, துணிநூல் ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், இது தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையால் நிர்வகிக்கப்படுகிறது.


துணிநூல் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் பணியாற்றுகின்றனர். மேலும், சேலம், கரூர், திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டல

அலுவலகங்களில் துணை இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

துணிநூல் துறையின் கீழ் பின்வரும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன: –


1. ஆண்டிப்பட்டி (தேனி), எட்டயபுரம் (தூத்துக்குடி), ஆரல்வாய்மொழி (கன்னியாகுமரி), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி), அறந்தாங்கி (புதுக்கோட்டை) மற்றும் அச்சங்குளம் (இராமநாதபுரம்) ஆகிய இடங்களில் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள்.
2. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்.
3. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், சென்னை.

## நிர்வாக அமைப்பு விளக்கப்படம்



## 3. தமிழ்நாடு– துணிநூல் மதிப்புத் தொடரின் பிரிவுகள் (Textile Value Chain)

தமிழ்நாட்டில் துணிநூல் தொழில்துறையானது, கீழ்க்கண்டவாறு, "இழை சாகுபடியில் தொடங்கி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி வரையிலான" துறைசார் மதிப்புத் தொடரின் (Sector Value Chain) அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கியது:






### 3.1. இழை (Fibre)

இந்தியாவின் துணிநூல் தொழிலில் மூலப்பொருள் இயற்கை இழைகளே. குறிப்பாக பருத்தி இழைகளே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு மாறாக, 2020–ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகளாவிய பயன்பாட்டில் செயற்கை இழையானது 72% பயன்படுத்தப்பட்டு முன்னிலையில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. பயன்பாட்டிலுள்ள பல்வேறு இழை வகைகள் பின்வருமாறு:




இழைகளின் வகைப்பாடு

**இயற்கை இழை – பருத்தி (Cotton)**

பருத்தி இழையானது, உலகிலேயே மிகவும் பிரபலமான இயற்கை இழையாக விளங்குகிறது. மேலும், தமிழ்நாட்டின் துணிநூல் தொழிலில் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான மூலப்பொருளாகவும் உள்ளது.



தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளின் வருடாந்திர சராசரி பருத்தித் தேவையான 120 இலட்சம் பேல்களில், மாநில அளவில், உள்நாட்டில் உற்பத்தி ஏறத்தாழ 3 இலட்சம் முதல் 5 இலட்சம் பேல்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளுக்குத் தேவையான

95% பருத்தியானது, குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா போன்ற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

**சிறப்பு பருத்தி இயக்கம். (Special Cotton Mission)**

அதிகரித்து வரும் பருத்திக்கான தேவையை பூர்த்தி செய்திடும் வகையில், ஒருங்கிணைந்த அணுகுமுறையிலான பருத்தி சாகுபடியில் சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு, ரூ.11.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் "நிலையான பருத்தி சாகுபடி இயக்கம்" எனும் திட்டத்தினை 2021-22 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு அதனை செயல்படுத்துவதற்கான முன்னெடுப்புகளானது, தமிழ்நாடு அரசின் வேளாண்மை துறையால் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், மிக நீண்ட இழை பருத்தி சாகுபடி பரப்பு விரிவாக்கத்தை ஊக்குவிக்க, வேளாண்மைத் துறையுடன் இணைந்து "சிறப்பு பருத்தி இயக்கம்" எனும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மூன்று

உறுப்பினர்கள் கொண்ட குழுவினை துணிநூல் துறை அமைத்துள்ளது.



மிக நீண்ட இழை பருத்தி

இந்த முயற்சியானது, பருத்தி உற்பத்தியை அதிகரித்து, தமிழ்நாட்டில் பருத்தி சார்ந்த ஜவுளித் தொழில்களின் வளர்ச்சிக்கு துணைபுரியும்.

**செயற்கை இழை (Man–made Fibre)**

செயற்கை இழைகள் கீழ்கண்ட வகைகளை உள்ளடக்கியது.

(i) 'சின்தடிக் இழைகள்' (Synthetic Fibre) – பெட்ரோலிய வேதிப்பொருட்களிலிருந்து பெறப்பட்டவை.

(ii) மறு உருவாக்கம் செய்யப்பட்ட இழைகள் (Regenerated fibres) – மரக்கூழ் போன்ற இயற்கை மூலங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட செல்லுலோஸிலிருந்து பெறப்பட்ட இழை.

(iii) மறுசுழற்சி செய்யப்பட்ட இழைகள் (Recycled Fibres) – PET (Polyethylene terephthalate) பாட்டில்கள் உட்பட மறுசுழற்சி செய்யப்பட்ட கழிவுகளிலிருந்து பெறப்பட்டது.

செயற்கை இழையானது, பன்முகப்படுத்தப்பட்ட பண்புகள், நிலையான தரம் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் உள்ளிட்ட பலதரப்பட்ட உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதால், முதலீட்டாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆர்வத்துடன் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

தமிழ்நாட்டில் செயற்கை இழை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முனைப்பான நடவடிக்கைகளை

துணிநூல் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளும் நடத்தப்பட்டு வருகின்றது.

நீர் மற்றும் எரிசக்தி பயன்பாட்டினைக் குறைத்து அதன் மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக PET பாட்டில் கழிவுகளை மறுசுழற்சி செய்து இழைகளாக மாற்றி உற்பத்தி செய்திட தற்பொழுது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.




PET பாட்டில்களின் மறுசுழற்சி

### 3.2. நூற்பு பிரிவு (Spinning)

நூல் நூற்றல் என்பது பஞ்சினை நூலாக மாற்றும் செயல்முறையாகும். நூலானது நெசவு மற்றும் பின்னலாடைக்கான மூலப்பொருளாகும். நூற்பு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இந்நூற்புப் பிரிவானது, ரிங் ஸ்பின்னிங் (Ring Spinning), ரோட்டார் ஸ்பின்னிங் (Open–end/Rotor Spinning), கோர் ஸ்பின்னிங் (core Spinning), ஏர்ஜெட் ஸ்பின்னிங் (Airjet Spinning), உராய்வு நூற்பு (Frictional Spinning) மற்றும் இதர வகை சுய–முறுக்கு நூற்பு (Self twist spinning), மின்னூட்ட நூற்பு (Electrostatic Spinning) வோர் டெக்ஸ் நூற்பு (Vortex Spinning) மற்றும் முறுக்கற்ற நூற்பு (Twistless Spinning) என பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வகைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல்களானது ஆடைகள், வீட்டு ஜவுளிகள், மருத்துவம் சார்ந்த ஜவுளிகள் மற்றும் இதர வகை உற்பத்திகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.


உலக அளவில் நிறுவப்பட்டுள்ள நூற்பு கதிர்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 21.9 கோடி (219 மில்லியன்) கதிர்களிலிருந்து

2021 ஆம் ஆண்டில் 22.5 கோடி (225 மில்லியன்) கதிர்களாக அதிகரித்துள்ளது. நிறுவப்பட்ட ஓபன்–எண்ட் ரோட்டர் நூற்பு சுழலிகளின் (Open–end–Rotors) எண்ணிக்கையானது 79 இலட்சத்திலிருந்து (7.9 மில்லியன்) 83 இலட்சமாக (8.3 மில்லியன்) அதிகரித்துள்ளது.

5 கோடிக்கும் (50 மில்லியன்) அதிகமான நூற்புக் கதிர்கள் மற்றும் 8.42 லட்சம் (0.84 மில்லியன்) ரோட்டார் நூற்பு சுழலிகள் ஆகியவற்றுடனும், 25% உலகளாவிய பருத்தி நூல் வர்த்தகத்துடனும், சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 2வது இடத்தைப் பிடித்துள்ளது.



இந்தியாவிலுள்ள மொத்த நூற்பாலைகளில் 55% நூற்பாலைகளும், நிறுவப்பட்ட மொத்த நூற்பு கதிர்களில் 43% கதிர்களும், ரோட்டர் நூற்பு சுழலிகளில் 60% சுழலிகள் ஆகியவற்றைக் கொண்டு நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை, சுழலிகளின் எண்ணிக்கை மற்றும் நூலின் உற்பத்தி ஆகியவற்றில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.




இந்தியா முழுவதும், ஆண்டு ஒன்றுக்கு 275 பில்லியன் டன் பருத்திக் கழிவுகளும், 112 பில்லியன் டன் துணி/ஆடைக் கழிவுகளும் உருவாக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வழக்கமாக

அவை குப்பை கிடங்குகளில் கொட்டப்படுகின்றன. தமிழ்நாட்டி , 400க்கும் மேற்பட்ட Open–end நூற்பாலைகள் மூலம் கழிவுப்பஞ்சு மற்றும் ஆடைக் கழிவுகளிலிருந்து நூல் உற்பத்தியானது மேற்கொள்ளப்படுகிறது.



இந்தியாவிலேயே நூற்புக் கதிர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முன்னணியில் இருந்தாலும், பழைய இயந்திரங்களைப் பயன்படுத்துவதால், நாட்டின் மற்ற பகுதிகளை விட

மாநிலத்தில், நூல் உற்பத்தித் திறன் (Productivity) குறைவாகவே உள்ளது.

தொழில்நுட்ப மேம்பாடு காரணமாக நெசவு (Weaving) மற்றும் பின்னல் (knitting) போன்ற அடுத்தடுத்த நிலைத் தொழில்களில், தரமான நூல் தேவையானது கணிசமாக அதிகரித்துள்ளதால், நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூலின் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் வணிகத்தைத் தக்கவைக்கவும் இயந்திரங்களை நவீனப்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, இத்துறைக்கு நவீனமயமாக்கல் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்திற்கான உதவி தேவைப்படுகிறது. அதற்கேற்ப, பழைய இயந்திரங்களை நவீனமயமாக்குவதற்காக நூற்பாலைகளுக்கு "தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை–2019" இன் கீழ் 2% வட்டி மானியம் தமிழ்நாடு அரசால் நூற்பாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**கூட்டுறவு நூற்பாலைகள்**

தமிழ்நாட்டில், பின்வரும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் 1.18 இலட்சம் நூற்பு கதிர்களுடன் தற்போது இயங்கி வருகின்றன.

1. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிபட்டி, தேனி.
2. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், தூத்துக்குடி.
3. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி.
4. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி.
5. கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை.
6. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அச்சங்குளம்.

இக்கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சிட்டா நூலையும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான கோன் நூலினையும் வழங்கி வருகின்றன. இவை வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும்


பள்ளிச் சீருடை வழங்கும் திட்டம் ஆகிய அரசின் முதன்மைத் திட்டங்களுக்கு பயன்டுத்தப்படுகின்றன. நூல் வழங்கிய விவரங்கள் பின்வருமாறு:

**வேட்டி சேலை வழங்கும் திட்டம் "பொங்கல் 2023" திட்டத்திற்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் வழங்கிய விவரம்.**

| வ. எ | நூற்பாலையின் பெயர் | நூற்பு கதிர்களின் எண்ணிக்கை | நூல் வழங்கிய அளவு (மெட்ரிக் டன்னில்) | நூல் மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா | 24192 | 600.60 | 23.29 |
| 2 | பாரதி | 18144 | 515.49 | 20.01 |
| 3 | கன்னியாகுமரி | 22800 | 649.94 | 25.49 |
| 4 | புதுக்கோட்டை | 20976 | 511.09 | 19.99 |
| 5 | கிருஷ்ணகிரி | 20160 | 455.14 | 17.55 |
| 6 | இராமநாதபுரம் | 12096 | 395.24 | 15.19 |
| | **மொத்தம்** | **118368** | **3127.50** | **121.52** |

**பள்ளிச் சீருடை வழங்கும் திட்டம் கல்வியாண்டு 2022-23 திட்டத்திற்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் வழங்கிய விவரம்.**

| வ. எ | நூற்பாலையின் பெயர் | நூற்பு கதிர்களின் எண்ணிக்கை | நூல் வழங்கிய அளவு (மெட்ரிக் டன்னில்) | நூல் மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | அண்ணா | 24192 | 689.82 | 24.72 |
| 2 | பாரதி | 18144 | 433.62 | 15.54 |
| 3 | கன்னியாகுமரி | 22800 | 538.68 | 19.31 |
| 4 | புதுக்கோட்டை | 20976 | 612.24 | 21.94 |
| 5 | கிருஷ்ணகிரி | 20160 | 475.26 | 17.03 |
| 6 | இராமநாதபுரம் | 12096 | 321.18 | 11.51 |
| | **மொத்தம்** | **118368** | **3070.80** | **110.05** |




**கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் கூட்டுறவு நூற்பாலைகள் நூல் வழங்கிய விவரம்**


| வ.எ | ஆலையின் பெயர் | நூல் வழங்கிய அளவு (மெட்ரிக் டன்னில்) | நூல் மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அண்ணா | 349.87 | 14.22 |
| 2 | பாரதி | 360.79 | 13.04 |
| 3 | கன்னியாகுமரி | 414.25 | 15.04 |
| 4 | புதுக்கோட்டை | 424.78 | 15.50 |
| 5 | கிருஷ்ணகிரி | 242.39 | 8.79 |
| 6 | இராமநாதபுரம் | 375.00 | 13.23 |
| | **மொத்தம்** | **2167.08** | **79.82** |

**கூட்டுறவு நூற்பாலைகளின் வெளிச்சந்தை விற்பனை விவரம்**

| வ. எ | ஆலையின் பெயர் | விநியோகிக்கப்பட்ட அளவு (மெ,டன்) | விநியோகிக்கப்பட்ட மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | அண்ணா | 222.48 | 7.70 |
| 2 | பாரதி | 44.16 | 1.37 |
| 3 | கன்னியாகுமரி | 99.66 | 3.29 |
| 4 | புதுக்கோட்டை | 162.24 | 2.56 |
| 5 | கிருஷ்ணகிரி | 33.00 | 1.09 |
| 6 | இராமநாதபுரம் | 12.00 | 0.36 |
| | **மொத்தம்** | **573.54** | **16.37** |

| கடந்த இரண்டு வருடங்களுககான கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் (ரூ. கோடியில்) | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எ | ஆலையின் பெயர் | உற்பத்தி | | விற்பனை | |
| | | 2021–22 | 2022–23 (ஜனவரி வரை) | 2021–22 | 2022–23 (ஜனவரி வரை) |
| 1 | அண்ணா | 58.14 | 66.34 | 55.85 | 66.31 |
| 2 | பாரதி | 49.88 | 48.71 | 49.51 | 47.48 |
| 3 | கன்னியாகுமரி | 56.03 | 57.77 | 50.88 | 63.65 |
| 4 | புதுக்கோட்டை | 55.13 | 53.45 | 47.87 | 57.20 |
| 5 | கிருஷ்ணகிரி | 39.15 | 47.37 | 37.54 | 41.23 |
| 6 | இராமநாதபுரம் | 33.98 | 39.01 | 32.19 | 39.45 |
| | மொத்தம் | 292.31 | 312.65 | 273.84 | 315.32 |






**கூட்டுறவு நூற்பாலைகளை நவீனமயமாக்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 2022–23 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற கூட்டத்தொடரின் போது வெளியிட்ட அறிவிப்புகளின்படி, கூட்டுறவு நூற்பாலைகளில் ஆட்டோ கோனர் (Autoconer) இயந்திரம், Compact Spinning System மற்றும் நூல் பதப்படுத்தும் இயந்திரம் (Yarn Conditioning Machine) நிறுவுவதற்கு மொத்தம் ரூ.31.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்கு,

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 ஆகியவற்றைப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 2022-23 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற கூட்டத்தொடரின் போது வெளியிட்ட அறிவிப்பின்படி, பாரதி, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலைகளில் 11 KV தனி உயர்மின்னழுத்த மின்பாதைகள் (Dedicated Power Feeder Line) அமைக்க ரூ.1.75 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பாரதி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) ஆலைகளால் செலுத்தப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன.

**3.3. நெசவு மற்றும் பின்னலாடை**

ஜவுளி மதிப்பு தொடரில் (Textile Value Chain) **பின்னல் தொழில்நுட்பம்** என்பது உயர் மதிப்புக் கூட்டும் செயல்முறையாகும். இது, நூலினை மிருதுவான துணிகளாக (Hosiery fabrics) மாற்றுவதன் மூலம் சாக்ஸ், பனியன்கள், உள்ளாடைகள் மற்றும் ஆடை தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது.


பின்னலாடை தொழிலுக்கு, தமிழ்நாடு பெரும் உறைவிடமாகவும், முக்கியமாக நாட்டின் மிகவும் முக்கிய பின்னலாடை குழுமங்களில் ஒன்றாக திருப்பூர் விளங்குகிறது. திருப்பூர் ஆண்டுக்கு ரூ.6,500 கோடி அளவிற்கு உற்பத்தியை ஈட்டக் கூடிய 4,000 உற்பத்தி அலகுகளை (Production Units) கொண்டதாகும். பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் மாவட்டம் மிகப் பெரிய மையமாக திகழ்வதோடு, 2021–22 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் 55% (ரூ.33,525 கோடி) பங்களிப்பை வழங்கியுள்ளது.

| இந்தியாவில் பின்னலாடை மற்றும் ஆடை ஏற்றுமதி [ரூ. கோடியில்] | | | |
|---|---|---|---|
| | 2020–21 | 2021–22 | 2022–23 [ஏப்ரல் முதல் ஜனவரி வரை] |
| இந்திய அளவில் | 46,890 | 60,950 | 53,586 |
| திருப்பூர் | 24,750 | 33,525 | 29,625 |
| பங்கு (%) | 52.80% | 55.0% | 55.32% |

கோவிட்–19 பெருந்தொற்றுக்கு பின்பும் மற்றும் 2022–ஆம் ஆண்டு துவக்கத்தில் ஆரம்பித்த ரஷ்யா உக்ரைன் போர் அகியவற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் விலை ஏற்றம் காரணமாகவும், பெரும்பாலும் ஏற்றுமதியைச் சார்ந்துள்ள பின்னலாடைத் தொழிலானது பெரும் பின்னடைவை சந்தித்து வருகிறது. முக்கிய ஏற்றுமதி சந்தைகளான

இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தேவைகள் குறைந்து வருவதால், பின்னலாடை தொழிலானது பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இருப்பினும், தேசிய அளவில் ஏற்றுமதியில், திருப்பூர் சீரான பங்கினை வகிப்பதோடு, வரும் காலங்களில் மீண்டும் இயல்பான வளர்ச்சி வேகத்தை எட்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.






நெசவு ஆடை பின்னல் ஆடை

### 3.4 பதனிடும் பிரிவு :

ஜவுளித் தொழிலில், பதனிடும் பிரிவானது, முடிவுற்ற ஜவுளி இரகங்களில் மதிப்பு கூட்டுதல் (Value Addition) மற்றும் தர மேம்பாட்டிற்கு பல்வேறு

விதங்களில் தனித்துவமான பங்களிப்பினை வழங்கி வருகிறது. ஜவுளித் துறையில் பதனிடும் பிரிவில் உள்ள பல்வேறு அங்கங்களின் முக்கிய மையமாக இருந்து வருகிறது.

பதனிடுதல் (Processing)– செயல்பாட்டு முறைகள்:




தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் செறிந்துள்ள ஈரோடு, திருப்பூர், கரூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில், பதனிடும் பிரிவில் கையால் இயக்கப்படும் பழமையான முறை முதல், தானியங்கி முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் உயர்

தொழில்நுட்பம் வரை பல்வேறு அளவிலான மாறுபட்ட தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பதனிடும் பிரிவு கீழ்க்கண்ட மூன்று வகைகளாக பிரிக்கப்படுகிறது.

1. ஒருங்கிணைந்த தொழில்நுட்பம் கொண்ட பதனிடும் தொழிற்சாலைகளில் உள்ள உயர் தொழில்நுட்ப பதனிடும் வசதிகள்.
2. நடுத்தர பதனிடும் தொழிற்சாலை (நடுத்தரம் முதல் மேம்பட்ட தொழில்நுட்ப பயன்பாடு )
3. சிறு அளவிலான பதனிடும் அலகுகள் (யூனிட்டுகள்)

**பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**



ஜவுளி குழுமங்களில் வெளியேறும் மாசினை கட்டுப்படுத்தவும், பசுமையான மற்றும் சுத்தமான சுற்று ழலை உறுதி செய்யவும், "பூஜ்ஜியநிலை திரவ வெளியேற்றும் வசதி" (ZLD) மற்றும் இதர மேம்பட்ட தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.

அதன்படி, திருப்பூரில் 18 பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவவும், தற்போதுள்ள பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தவும் ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து ரூ.703.29 கோடியை வழங்கியுள்ளன. இம்முயற்சியானது, நிலையான உற்பத்தி மற்றும் நீடித்த வேலை வாய்ப்புகளை உறுதி செய்வதுடன், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழில் மற்றும் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளித்து வருகிறது.

**பிரச்சினைகள்**

பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில், ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தான ஏறத்தாழ 73000 மெட்ரிக் டன் கலப்பு கழிவு உப்புகள் (Accumulated Mixed Waste Salt) தேக்கமடைந்துள்ளதோடு, தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது. இப்பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

உரிய தொழில்நுட்பமின்மை காரணத்தினால், தற்போது தொடர்ந்து கழிவு உப்புக்கள் தேக்கமடைந்து வருகின்றன. இதனால் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தொடர்ந்து கலப்பு கழிவு உப்புகள் குவிந்து வருகின்றன. எனவே இதனைத் தடுக்க புதுமையான மற்றும் குறைந்த செலவிலான கழிவு சுத்திகரிப்புத் தொழில் நுட்பங்களை விரைவில் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது.

**அரசின் தீவிர நடவடிக்கைகள்**

மேற்கண்ட பிரச்சினைகளைக் களைந்திட, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை

அமைச்சர் அவர்களால் 2022–2023 ஆம் ஆண்டுக்கான துணிநூல் துறையின் மானியக் கோரிக்கையின் போது "தமிழ்நாட்டிலுள்ள ஜவுளிப் பதனிடும் தொழில் சார்ந்த பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில், சுத்திகரிப்பு செய்த பின்னர் இருப்பாக உள்ள மீதமுள்ள கழிவு உப்புகளை சுற்றுச்சூழல் பாதிப்பின்றி அகற்றிடத் தேவையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் **(Research and Development)** ஊக்குவிக்கப்படும் " என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பின் மூன்று முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

1. தொடர் கழிவு உப்பு மேலாண்மை (Concurrent Reject Management System) மூலமாக மேலும் கழிவு உப்புகள் குவிவதை தடுத்தல்.
2. ஏற்கனவே குவிந்துள்ள கழிவு உப்புகளை, பயன்படுத்தக்கூடிய துணைப்பொருட்களாக (Usable by– Products) மாற்றுதல்.
3. கழிவு நீர் சுத்திகரிப்பிற்கான செலவினைக் குறைத்திடும் வகையில், பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குவதற்குத்

தேவையான நிலையான செயல்பாட்டு வழிமுறைகளை உருவாக்குதல் (SOP).

பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களில் சேகரமாகும் (Accumulate) கழிவு உப்பு மற்றும் ஏற்கனவே குவிந்துள்ள அபாயகரமான கழிவு உப்புகளை அகற்றிட உரிய தொழில்நுட்பம் வழங்குநரை (Technology Provider) இறுதி செய்ய தொழில்நுட்ப அங்கீகரிப்பு குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது .

இக்குழுவால் பல்வேறு கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, கலப்பு கழிவு உப்புக்களை அகற்றுவதற்காக, பொருத்தமான தொழில்நுட்பத்தை இறுதி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், புதிய பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கும் தற்போது உள்ள பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் செலவினங்களைக் குறைத்திடவும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOP) இக்குழு பரிந்துரைக்கும்.


25.11.2022–ஆம் தேதியன்று நடைபெற்ற தொழில்நுட்ப ஜவுளிகள் தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கில், திருப்பூரில் உள்ள பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குவிந்துள்ள கலப்புக் கழிவு உப்புக்களை அகற்றுவதற்கான தொழில்நுட்பம் வழங்குநருடன் (Technology Provider) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

**3.5 ஆடை மற்றும் ஆயத்த ஆடை (Garment and Apparel)**

2019–20–ஆம் ஆண்டில், 839 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த, உலகளாவிய ஆயத்த ஆடைச் சந்தையானது, 2025–ம் ஆண்டில் 3% கூட்டு வருடாந்திர வளர்ச்சியடைந்து (CAGR), 1000 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு எட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்தியாவை பொறுத்தவரை, உள்ளூர் ஆடை மற்றும் ஆயத்த ஆடைச் சந்தையானது, 2019–2020–ஆம் ஆண்டில் எய்திய 106 பில்லியன் அமெரிக்க டாலரைக் காட்டிலும், 2025–2026–ஆம்

ஆண்டில் 190 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

ஆடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழிலானது, அந்நியச் செலாவணி ஈட்டுவதிலும், வேலை வாய்ப்பினை உருவாக்குவதிலும், இந்திய பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கிறது. உலக அளவில், இந்தியா சிறந்த ஏற்றுமதி நாடுகளில் ஒன்றாக விளங்கிய போதிலும், நாட்டின் துணித்தொழில் துறையின் ஏற்றுமதியின் முழுத்திறனையும் (Export Potential) பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது என்ற வளர்ச்சிக்கான உண்மை நிலையானது உணரப்பட்டு வருகிறது. மேலும், துணி ஏற்றுமதியில் கம்போடியா, வங்கதேசம், துருக்கி, இலங்கை, இந்தோனேஷியா, வியட்நாம் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் கடும் போட்டியினை இந்தியா தற்போது சந்தித்து வருகிறது.



## 3.6 தொழில்நுட்ப ஜவுளிகள்

தொழில்நுட்ப ஜவுளிகள் என்பது பாரம்பரிய ஜவுளிகளுடன் ஒப்பிடும் போது, ஒருசில உயர் செயல்திறன்களைக் கொண்ட ஜவுளிகள் ஆகும்.

பல வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் தொழில்நுட்ப ஜவுளிகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும், தொழில்நுட்ப ஜவுளிகளில் ஏற்படக் கூடிய தொழில்நுட்ப, பொருளாதார மற்றும்

சுற்றுச்சூழல் நன்மைகளை இந்தியா பெருமளவில் அடைய வேண்டியுள்ளது.

தொழில்நுட்ப ஜவுளிப்பிரிவானது, பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டு, வேகமாக வளர்ந்துவரும் உபபிரிவாகும். தொழில்நுட்ப ஜவுளிகளின் இறுதிப் பயன்பாடு கீழ்க்காண் 12 முக்கிய தொழில் பிரிவுகளில் பரவலாக காணப்படுகிறது.


SEGMENTS OF TECHNICAL TEXTILES
PRO TECH
MOBIL TECH
MEDI TECH
INDU TECH
AGRO TECH
GEO TECH
SPORT TECH
BUILD TECH
PACK TECH
CLOTH TECH
HOME TECH
OEKO TECH

**சந்தை நிலவரம்**

தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான தேவையானது, சமீபத்திய காலங்களில், பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள், பல்வேறு தொழில்களில் பயன்பாடு அதிகரிப்பு, குறைந்த செலவு, எளிதில் பயன்படுத்துதல், நீடித்த தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற காரணங்களால் உலகளவில் அபரிமிதமாக அதிகரித்து வருகிறது.


உலக தொழில்நுட்ப ஜவுளி சந்தையானது 2021–இல் 262 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் ஏற்றுமதி வணிகம் 126 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இச்சந்தையானது 2018–2021 ஆம் ஆண்டில், 4.7% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளர்ச்சி அடைந்துள்ளது. இத்துறையின் சந்தை ஊடுருவல் (Market penetration) 30%–70% ஆக உள்ளது.

2020–21 மற்றும் 2021–22–ஆம் ஆண்டுகளில், இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளி ஏற்றுமதி மற்றும்

இறக்குமதி விவரங்களின் பிரிவு வாரியான ஒப்பீடு பின்வருமாறு:–

| வ. எண் | பயன்பாட்டு பிரிவு | மதிப்பு (மில்லியன் டாலர்கள்) | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏற்றுமதி | | இறக்குமதி | |
| | | 2020-21 | 2021-22 | 2020-21 | 2021-22 |
| 1 | பேக்டெக் | 784.5 | 1,104.1 | 59.1 | 84.9 |
| 2 | இண்டுடெக் | 522.7 | 692.7 | 505.4 | 733.1 |
| 3 | மொபில்டெக் | 187.2 | 261.3 | 501.6 | 806.2 |
| 4 | கிளாத்டெக் | 226.6 | 222.7 | 214.5 | 281.2 |
| 5 | ஹோம்டெக் | 125.6 | 136.8 | 196.3 | 257.6 |
| 6 | மெடிடெக் | 119.7 | 154.6 | 113.5 | 140.5 |
| 7 | அக்ரோடெக் | 89.2 | 93.8 | 36.3 | 49.6 |
| 8 | பில்ட்டெக் | 17.9 | 48.7 | 12.9 | 22.3 |
| 9 | புரோடெக் | 39.5 | 49.4 | 25.9 | 21.8 |
| 10 | ஜியோடெக் | 27.5 | 35.1 | 17.1 | 23.1 |
| 11 | ஸ்போர்ட்டெக் | 73.4 | 44.0 | 16.8 | 23.4 |
| 12 | இழை & நூல் | 1.6 | 0.8 | 12.3 | 16.0 |
| | மொத்தம் | 2215.3 | 2843.9 | 1711.6 | 2459.6 |

## தமிழ்நாடு – சுற்றுச்சூழல் (Eco–System)



இந்திய அளவில், தமிழ்நாடு ஒரு முக்கிய ஜவுளி மையமாக உள்ளது. துடிப்பான பொருளாதாரம், வலுவான தொழில்துறை, சுற்றுச்சூழல் அமைப்பு, திறமையான பணியாளர்கள், அபரிமிதமான ஆற்றல் வளங்கள், நிலம், மற்றும் குறிப்பிடத்தக்க அளவிலான உள்ளூர் தேவை பல பயன்பாட்டு தொழில்கள் (Multiple End User Industries) மற்றும் துறைகள் (Sectors) ஆகிய காரணங்களால் தொழில்நுட்ப ஜவுளி பிரிவில், தமிழ்நாடு மிகப்பெரிய வளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் இத்தொழிலின் வளர்ச்சிக்கு சாதகமான பின்வரும் பல்வேறு காரணிகள் உள்ளன.

- **வலுவான ஜவுளி மதிப்பு தொடர் (Strong Textile Value Chain)**

பாரம்பரிய ஜவுளி உற்பத்தியில், தமிழ்நாடு வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள திறன்களை தொழில்நுட்ப ஜவுளிகளுக்கு ஏற்ப மேம்படுத்துவது எளிதாகும்.

- **வளர்ந்து வரும் இறுதி பயன்பாட்டு தொழில்கள் (End User Industries)**

  - தமிழ்நாடு, இந்தியாவிலேயே மிகப்பெரிய ஆட்டோமொபைல் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தி மையமாக இருப்பதால், உயர் மதிப்பு மற்றும் உயர் தொழில்நுட்ப, வாகன உற்பத்தி சார்ந்த "மொபில்டெக்" முதலீடுகளை ஈர்ப்பதற்கு ஏற்ற சூழல் உள்ளது.
  - தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் பகுதிகளானது, பருத்தியை அடிப்படையாகக் கொண்ட ஜவுளி நூற்பு, நெசவு மற்றும் பின்னலாடை உட்கட்டமைப்பைக் கொண்டுள்ளதால், மருத்துவம் சார்ந்த "மெடிடெக்" முதலீடுகளுக்கு மகத்தான வாய்ப்புகள் உள்ளது.
  - நவீன கட்டுமான முறை மற்றும் தொழில்நுட்பங்களால், Buildtech (பில்டு டெக்) தொழில்நுட்ப ஜவுளிகளின் தேவை அதிகரித்துள்ளது. மாறிவரும் சுற்றுச்சுழல் மற்றும்

சமூக விதிமுறைகள் பெரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்களில் (Large Infrastructure development projects) பாதுகாப்பு உடை பயன்பாட்டினை வலியுறுத்துகிறது.

➢ **தேவை மற்றும் வழங்குதல் இவற்றிற்கான இடைவெளி (Demand & supply Gap)**

- வளர்ந்த நாடுகளில், 30% லிருந்து 70% ஆக உள்ள தொழில்நுட்ப ஜவுளிகளின் சந்தை ஊடுருவல் (Market penetration) அளவானது இந்தியாவில் 10% ஆக மட்டுமே உள்ளது.
- பாதுகாப்பு, சுகாதாரம், மாறிவரும் வாழ்க்கை முறை, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பாதுகாப்பு உடைகள் பற்றிய விழிப்புணர்வு போன்றவற்றால், தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான உள்நாட்டு தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தடைகள் (Impediments)**

**எனினும், மாநிலத்தில் இந்தத் துறையின் வளர்ச்சியைப் பாதிக்கும் சில தடைகள் உள்ளன, அவை களையப்பட வேண்டும்.**

➢ **போதிய விழிப்புணர்வு இன்மை**

பாரம்பரிய ஜவுளிகளுடன் ஒப்பிடுகையில், தொழில்நுட்ப ஜவுளியானது இந்தியாவில் ஒரு புதிய மற்றும் வளர்ந்து வரும் பிரிவு என்பதால், தொழில்முனைவோர் மத்தியில் இவ்வகை ஜவுளிகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது.

➢ **புதிய தொழிலில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களின் உள்ளார்ந்த தயக்கம்**

தொழில்நுட்ப ஜவுளிகளின் உற்பத்தி முறைகள், சந்தைப்படுத்துதல் மற்றும் இலாபம் ஆகியவை பற்றிய போதிய விழிப்புணர்வின்மை காரணங்களினால் முதலீட்டாளர்கள் இத்துறையில் முதலீடு செய்ய தயக்கம் காட்டுகின்றனர்.

- **உயர்–செயல்திறன் ஜவுளிக்கான சிறப்பு மூலப்பொருட்கள் கிடைக்கப்பெறாமை (Non–Availability of Special Raw Materials)**

இந்தியாவில், தேவையான தொழில்நுட்பம் இல்லாததாலும், சிறப்பு இழை மூலப்பொருட்களை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான வலுவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சூழல் இல்லாததாலும், மேற்காண் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சீனா, தைவான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளையே இந்தியா பெருமளவில் சார்ந்துள்ளது.

- **அரசின் முன்னெடுப்புகள்**

தொழில்நுட்ப ஜவுளித்தொழிலில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், தேவைப்படும் உதவிகளை வழங்கிடவும், துணிநூல் துறையால் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **புதிய முதலீடுகளுக்கென நிதி உதவி**

2022-23 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, உயர் செயல்திறன் கொண்ட மொபில்டெக் (Mobile-tech), புரோடெக் (Pro-tech) மற்றும் ஸ்போர்ட்டெக் (Sport-tech) இரக தொழில்நுட்ப ஜவுளிகளை உற்பத்தி செய்ய முன்வரும் புதிய நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு தொழில்துறையுடன் ஒருங்கிணைந்து நிதியுதவி வழங்கப்படும்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.03.2023 அன்று தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு உயர் மதிப்பு தொடர் (High Value Chain) ஜவுளி உற்பத்தியினை ஆதரிக்கும் பொருட்டு ஒரு சிறப்புத் திட்டத்தை (தொழில் துறையால் செயல்படுத்தப்படும்) துவக்கி வைத்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், குறைந்தபட்சம் ரூ.50 கோடி முதலீட்டில், குறைந்தபட்சம் 50 வேலை வாய்ப்புகளை உருவாக்கி, தொழில் நுட்ப ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்ற உற்பத்தி நிறுவனங்கள் கீழ்க்கண்ட முதலீட்டு ஊக்குவிப்பு மானியத்தினை பெறலாம்.

அ) தகுதியான நிலையான சொத்து மதிப்பில் (Eligible Fixed Asset) 15% **சிறப்பு மூலதன மானியம்,** பத்து வருடங்களுக்கு சம தவணைகளாக (Equal Annual Installments) அல்லது

ஆ) 0.75% முதல் 2% வரை **விற்பனை அடிப்படையிலான மானியம்,** வேலைவாய்யப்பு தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் தகுதியின் அடிப்படையில், பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

- **ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கான நிதி உதவி**

தொழில்துறை வளர்ச்சியில், "ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு" முக்கிய பங்கு வகிக்கிறது. 2022–23 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தொழில்நுட்ப ஜவுளித் துறையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்கப்படும்.

முன்மொழியப்பட்ட நிதி உதவி பின்வருமாறு:

அ) தொழில்துறை அமைப்புகள் மூலம் பெறப்படும் திட்டங்களுக்கு, திட்ட மதிப்பில் 30% அளவிற்கு (அதிகபட்சம் ரூ.6.00 இலட்சம்) நிதியுதவி வழங்கப்படும்.

ஆ) கல்வி அல்லது ஆராய்ச்சி நிறுவனங்களால் தொடங்கப்பட்ட திட்டங்களுக்கு, திட்டச்

செலவில் 100% (அதிக பட்சம் ரூ.20.00 லட்சம்) நிதியுதவி வழங்கப்படும்.

**பன்னாட்டு தொழில்நுட்ப ஜவுளி கருத்தரங்கு**

தொழில்நுட்ப ஜவுளிகளின் வளர்ச்சிக்கான வாய்ப்பு தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளதை உணர்ந்து, 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் "தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான பன்னாட்டு கருத்தரங்கம்" சென்னையில் நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

கருத்தரங்கையொட்டி அமைக்கப்பட்டிருந்த காட்சி அரங்கங்களில், இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தினர்.




25.11.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தொழில்நுட்ப ஜவுளிகள் தொடர்பான சர்வதேச கருத்தரங்கம்




தொழில்நுட்ப ஜவுளிகள் தொடர்பான சர்வதேச மாநாட்டில்
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்

கருத்தரங்கில் பின்வரும் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன.

- மருத்துவ ஜவுளி உட்பட தொழில்நுட்ப ஜவுளிப்பிரிவு எழுச்சி மிக்க துறையாக (Sunrise Sector) வரையறுக்கப்பட்டதால், தமிழ்நாடு அரசு தொழில்நுட்ப ஜவுளித் தொழிலை மேம்படுத்த உதவும்.
- தொழில்துறையினர் அரசு நிறுவனங்களின் தொழில்நுட்ப ஜவுளிகள் தேவையினை பூர்த்தி செய்ய முடியும், ரயில்வே, நெடுஞ்சாலைகள் மற்றும் பல்வேறு துறைகள் இவ்வகை ஜவுளிகளை கொள்முதல் செய்து வருகின்றன.
- முக்கிய மூலப்பொருட்களன விஸ்கோஸ் ரேயான், நைலான் மற்றும் கார்பன் இழைகளை உற்பத்தி செய்வதற்கான போதிய உற்பத்தி திறன் இந்தியாவில் இல்லை. இந்த மூலப்பொருட்களை இறக்குமதி செய்வது விலை உயர்ந்தது மற்றும்

உலகளாவிய விநியோகச் சங்கிலி இடையூறுகளுக்கு உட்பட்டது.

- வளர்ந்த நாடுகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த நிறுவனங்களுடன் கூட்டு சேர்வதன் மூலம் உயர்நிலை தொழில்நுட்ப அறிவை பரிமாற்றம் செய்வதற்கு வழிவகை செய்கிறது.
- தொழில்துறை தொழில்நுட்ப ஜவுளிகளை மேம்படுத்துவதற்காக கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.
- தொழில்நுட்ப ஜவுளி அமைப்புகள், உற்பத்தி திறனில் இந்தியா தன்னிறைவு அடைவதற்கும், உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறையில் அதிக அளவில் முதலீடு செய்வதற்கும், தொழில்நுட்ப அறிவினை பரிமாற்றம் செய்யவும் ஏதுவாக சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

- **மும்பை– டெக்னோடெக்ஸ்–2023 கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கம் (Tamil Nadu Pavilion)**

தமிழ்நாட்டி தொழில்நுட்ப ஜவுளித்தொழில் பிரிவினை மேம்படுத்துவதற்காக, 2023–ஆம் ஆண்டு பிப்ரவரி 22 முதல் 24–ஆம் தேதி முடிய மும்பையில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சி மற்றும் கருத்தரங்கமான, "டெக்னோடெக்ஸ்–2023"–இல் தமிழ்நாடு சார்பில் "தமிழ்நாடு அரங்கம்" அமைக்கப்பட்டது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னணி உற்பத்தியாளர்கள் தங்கள் ஜவுளிகளை காட்சிப்படுத்தினர்.

இதற்கு பார்வையாளர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. பார்வையாளர்களுக்கு, தமிழ்நாட்டில் முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகளான இணக்கமான வணிகச் சூழல், வலுவான தொழில்துறைச் சூழல், மாநிலத்தில் அமைந்துள்ள இறுதிப் பயனர் தொழில்கள் (End User Industries) மற்றும் அரசின் முன்னெடுப்புகள் குறித்து விளக்கப்பட்டது.

டெக்னோடெக்ஸ்–2023–இல் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரங்கமானது இத்துறையில் புதிய வாய்ப்புகளைக் கண்டறிய வழிவகை செய்துள்ளது.




தமிழ்நாடு அரங்கம், டெக்னோடெக்ஸ்–2023, மும்பை

## 4. துணிநூல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 4.1 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா (SITP) திட்டம்

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் (SITP) திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 7 ஜவுளிப் பூங்காக்கள்

ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பின்வரும் 4 ஜவுளிப் பூங்காக்கள் முழுமையாக நிறுவப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

1. உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம், திருப்பூர்.
2. ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர்.
3. மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி, மதுரை.
4. உயர்தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, குமாரபாளையம், நாமக்கல்.

பின்வரும் 3 ஜவுளிப் பூங்காக்களில் முன்னேற்றப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. GILT ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கம்பள்ளி, திருப்பூர்.
2. சைமா துணிநூல் பதனிடும் ஜவுளிப் பூங்கா, கடலூர்.
3. பல்லவாடா தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா, ஈரோடு.

2023-24 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட உரையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், "119 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.880 கோடி

திட்ட மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா ஒன்று சேலத்தில் நிறுவப்படும்" என அறிவித்தார்கள்.

இப்பூங்காவானது, ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் (SITP) திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டம் (IPDS) ஆகிய ஒன்றிய அரசின் இரண்டு திட்டங்களின் கீழ் பயன்பெறும் வகையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4.2 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டம்**

இந்தியாவின் ஜவுளித் தளமாகத் தமிழகத்தை நிலைநிறுத்தவும், மாநிலத்தில் தொழில் முனைவோர்களை ஊக்குவித்து, உற்பத்தி அலகுகளை (Production Units) நிறுவுவதன் மூலம் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், "சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டம்" தமிழ்நாடு அரசால் 2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், அதிகபட்சமாக ரூ.2.50 கோடிக்கு உட்பட்டு தகுதியான திட்டச் செலவில், 50% வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. முன்னதாக, இந்த சலுகைகளுக்கான தகுதியானது குறைந்தபட்சம் 10

ஏக்கர் பரப்பளவு மற்றும் 10 உற்பத்தி அலகுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாக இருந்தது.

மேற்குறிப்பிட்ட தகுதிகளைத் தளர்த்திடுவதற்கான, தொழில்முனைவோர்களின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டும், அதிக எண்ணிக்கையில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைக்கவும், தமிழ்நாடு அரசு கீழ்க்கண்டவாறு விதிமுறைகளை திருத்தியுள்ளது.

- இரண்டு ஏக்கர் நிலம்,
- மூன்று உற்பத்தி அலகுகள்
- "உற்பத்தி நோக்கங்களுக்கான தொழிற்சாலைக் கட்டடங்கள்" தகுதியான மானியக் கூறுகளில் சேர்க்கப்பட்டுள்ளது (அரசாணை எண்.97, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, நாள்.24.06.2022).

## 4.3 பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆயத்த ஆடைப் பூங்காக்கள் (பி.எம்.மித்ரா) திட்டம்

- பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆயத்த ஆடைப் பூங்காக்கள் (பி.எம்.மித்ரா) திட்டமானது, ஜவுளித் தொழிலின் மொத்த மதிப்புத் தொடரையும் (Value Chain) ஒரே இடத்தில் அமைப்பதன் மூலம், போக்குவரத்துச் செலவுகளைக் குறைத்தல், முதலீடுகளை ஈர்த்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலமாக இந்திய ஜவுளித்தொழிலை வலுப்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

- மாநில அரசு, இத்திட்டத்திற்கான சிறப்பு நோக்க முகமையினை (Special Purpose Vehicle) அமைத்திட உதவுவதுடன் 51% நிதி பங்களிப்பினையும் வழங்கும். ஒன்றிய அரசின் நிதி பங்களிப்பு 49% ஆகும்.

- இதன்படி, இந்தியாவில் பி.எம்.மித்ரா திட்டத்தின் கீழான, முதல் பூங்காவின் தொடக்கவிழா 22.03.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னையில் நடைபெற்றது.


Launch of India's first

இப்பூங்காவானது விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில், 1052 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது.

**4.4. தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சிறப்பு திட்டம், மறு சுழற்சி முறையிலான செயற்கை இழை, செயற்கை இழை துணி மற்றும் ஆடைகள் உற்பத்தி (2023)**

ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) உயர்நிலை செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரு புதிய சிறப்பு திட்டம் 18.03.2023 அன்று அறிவிக்கப்பட்டது. (தமிழ்நாடு அரசின் தொழில் துறையினால் செயல்படுத்தப்படும்)

இச்சிறப்பு திட்டமானது தொழில்நுட்ப ஜவுளிகள், மறுசுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை இழைகள், செயற்கை இழையிலான துணி

**மற்றும் ஆயத்த ஆடைகள் உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.**

இத்திட்டத்தின் கீழ், குறைந்தபட்சம் முதலீட்டில், வேலை வாய்ப்புகளை உருவாக்கி, தொழில் நுட்ப ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்ற உற்பத்தி நிறுவனங்கள் கீழ்க்கண்ட முதலீட்டு ஊக்குவிப்பு மானியத்தினை பெறலாம்.

**தொழில்நுட்ப ஜவுளி / மறுசுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை இழைகள் மற்றும் செயற்கை இழையிலான துணி {(புதிய அலகுகள்/ விரிவாக்கம்) New Units/ Expansion}**

அ) தகுதியான நிலையான சொத்து மதிப்பில் (Eligible Fixed Asset) **15% சிறப்பு மூலதன மானியம் அல்லது**

ஆ) 0.75% முதல் 2% வரை **விற்பனை அடிப்படையிலான மானியம்** அடிப்படையில், பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

**தொழில்நுட்ப ஜவுளி / மறுசுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை இழைகள் மற்றும் செயற்கை இழையிலான துணி {(பல்வகைப்படுத்துதல் (Diversification)}**

தகுதியான நிலையான சொத்து மதிப்பில் (Eligible Fixed Asset) **10% சிறப்பு மூலதன மானியம் (ஒரு வருடத்திற்கு அதிகபட்சம் ரூ.3.00 கோடி)**

மேலும், மற்ற மானியங்களான பயிற்சி மானியம், நிலத்தின் மதிப்பின் ஊக்கத் தொகை, மின்சார வரி ஊக்கத்தொகை, முத்திரை வரி ஊக்கத்தொகை, பசுமைத் தொழில் ஊக்கத்தொகை, மேம்படுத்தப்பட்ட தகுதிச்சான்றிதழ் ஊக்கத்தொகை, மேம்படுத்தப்பட்ட அறிவுச்சார்ந்த சொத்து மீதான ஊக்கத்தொகை மற்றும் வட்டி மானியம் ஆகியவை வழங்கப்படுகிறது.

**ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனங்கள்**

- **1.75% முதல் 2% வரை விற்பனை அடிப்படையிலான மானியம்** அடிப்படையில், பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

**தொழில்நுட்ப ஜவுளிகள் மற்றும் செயற்கை இழைகளின் பொது வசதி மையங்களுக்கு ஆதரவு அளித்தல்**

தொழில்நுட்ப ஜவுளிகள் மற்றும் செயற்கை இழை பிரிவுகளுக்காக பொதுவசதி மையங்கள் நிறுவுவதற்கு பின்வரும் ஊக்கத்தொகைகள் வழங்கப்படுகிறது.

- பொது வசதி மையங்களின் மேம்பாட்டிற்கான ஊக்கத்தொகை
- விற்பனை ஊக்கத்தொகை
- கண்டறிதலுக்கான ஊக்கத்தொகை
- வடிவமைப்பு திறனுக்கு ஆதரவு அளித்தல்

## 5. ஜவுளித்துறை மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள்/ முயற்சிகள்

### 5.1. தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (Technical Advisory Committee)

ஜவுளித் துறையின் பல்வேறு பிரிவுகளின் தொழில்நுட்ப பொருளாதார நிலையினை கண்காணிக்கவும், மாநில ஜவுளித் தொழில் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும், ஜவுளித்துறையினை மேலும்

வலுப்படுத்திட ஏதுவாக கொள்கைகளை வகுத்திடவும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அரசாணை (நிலை) எண்.193, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்(சி2) துறை, நாள்.14.12.2022–இன்படி தொழில்நுட்ப ஆலோசனைக் குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஜவுளித் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த வல்லுநர்கள், ஜவுளிக் கூட்டமைப்புகள், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும் முன்னோடி தொழில் முதலீட்டாளர்களை பிரதிநிதிகளாக இக்குழுகொண்டுள்ளது.

**தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவானது,** ஜவுளித்துறையின் பல்வேறு பிரிவுகளான நூற்பு, நெசவு, பின்னலாடை, பதனிடுதல், ஆயத்த ஆடை தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப ஜவுளி ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான தீர்வுகளை வழங்கும். இக்குழுவால் வழங்கப்படும் அறிவுரைகளின்

அடிப்படையில் துணிநூல் துறையானது தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதற்காக ரூபாய் 6.50 இலட்சம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2 ஜவுளி நகரம் (Textile City)**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால், 2022-2023-ஆம் ஆண்டு சட்டப்பேரவையில், "சென்னைக்கு அருகில் ஜவுளி நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான செயல்திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இது ஒட்டுமொத்த ஜவுளி மதிப்புத் தொடரில் உள்ள பொருட்களை சந்தைப்படுத்தும் விதமாக, வணிகரிடமிருந்து வணிகர் (B to B) மற்றும் வணிகரிடமிருந்து வாடிக்கையாளர் (B to C) ஆகிய வணிகத்திற்கான வாய்ப்புகளை வழங்குவதாக அமையும்.

ஜவுளி நகரமானது, ஜவுளி மதிப்புத் தொடரின் "முன் மற்றும் பின் உள்ள" பிரிவுகளை (Forward & Backward integration) ஒருங்கிணைக்கவும், ஒரு இணக்கமான வணிகச் சூழலை உருவாக்குவதை நோக்கமாகவும் கொண்டிருக்கும்.

இந்த ஜவுளி நகரம் ஒட்டுமொத்த ஜவுளி மதிப்புத் தொடரில் உள்ள அனைவருக்கும் ஒரு தொடர்பு தளத்தை வழங்கவும், ஜவுளித்துறையின் இழை முதல் நவீன நாகரிகம் வரையுள்ள போக்குகளை கண்டறிந்து அதற்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்ய உதவும் வகையிலும் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இது ஜவுளி மதிப்புத் தொடரில் உள்ள பிரிவுகளை இணைத்து, ஒன்று மற்றொன்றுக்கு உதவவும், குறைந்த செலவிலான மதிப்புக் கூட்டலுக்கான வழிகளை கண்டறியவும் உதவும். இந்த ஜவுளி நகரம் தமிழ்நாட்டினை, தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஒரு பெரிய மற்றும் வசதியான

ஜவுளி வர்த்தக மையமாக மாற்றி அதன் மதிப்பினை உயர்த்தும்.

சென்னையில் ஜவுளி நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்வதற்கும் மற்றும் விரிவான செயல்திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிப்பதற்கும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி ஒரு ஆலோசனை நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.168, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (சி2) துறை, நாள்: 07.11.2022-ன் படி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**5.3 சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் "தமிழ்நாடு பெவிலியன்" அமைத்தல்**

உலக அளவில் மாநிலத்தை முன்னிலைப்படுத்தவும் மற்றும் அதன் திறன்களை வெளிப்படுத்தவும், 2022-23 ஆம் ஆண்டில் இரண்டு சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் தமிழ்நாடு பெவிலியன் அமைத்திட தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

ஒவ்வொரு கண்காட்சியிலும், காட்சியரங்கம் அமைப்பதற்கான செலவினத்தில், 50 சதவீத செலவினம் அல்லது அதிகபட்சமாக ஒரு காட்சியரங்கத்திற்கு ரூ.2 இலட்சம் ஒரு விற்பனையகத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து செல்லும் 20 கண்காட்சியாளர்கள் /ஜவுளி தொழில்முனைவோருக்கு விமானக் கட்டணத்தில் (Economy Class) 50 சதவீதமும் அதிகபட்சமாக ஒரு கண்காட்சிக்கு ரூ.25 இலட்சம் செலவினத்தை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்கிறது.

தமிழ்நாடு பெவிலியன், ஜவுளி ஏற்றுமதியைப் பெருக்குவதற்கும், தமிழ்நாட்டிற்கு அன்னியச் செலாவணியை பெருக்குவதற்கான புதிய வழிகளைக் கண்டறியும் ஜவுளித்தொழிலில் ஏற்றுமதி அதிகரிப்பதால் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாவதை உறுதிப்படுத்தும்.

மேலும், இவ்வாறு சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் அமைக்கப்படும் தமிழ்நாடு

பெவிலியன், சர்வதேச ஜவுளி மற்றும் ஆடைத் தொழிலின், சமீபத்திய நாகரீக நடைமுறைகளை அறிந்து கொள்ள உதவும்.

இதற்கென 2022-23 ஆம் ஆண்டில் ரூ.1.60 கோடியை தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**5.4. உலகளாவிய நிகழ்வுகளில் பங்குபெறுதல்**

சர்வதேச ஜவுளி கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்பதானது, முதலீடுகளை ஈர்த்தல், ஜவுளித் துறையின் சமீபத்திய போக்குகள், தேவைப்படும் அறிவுசார் நுணுக்கங்களைப் பெறுதல் தொழில்நுட்பங்கள், தயாரிப்புகளில் புதுமைப்படுத்துதல் பற்றிய விவரங்களைப் பெறுவதற்கு ஏதுவாகவும் தமிழ்நாட்டின் உள்ளார்ந்த வளங்கள் மற்றும் தொழில் வாய்ப்புகளை காட்சிப்படுத்துதல் உதவிடும் வகையிலும் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசின் துணிநூல் துறையானது, 2022-ஆம் ஆண்டில் இரண்டு சர்வதேச ஜவுளிக் கண்காட்சிகளில் பங்கேற்றது.

"டெக்டெக்ஸ்டில்–2022" என்றழைக்கப்படும் தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சர்வதேச ஜவுளிக் கண்காட்சியானது ஜெர்மனியின் பிராங்க்பர்ட்டில் 2022–ஆம் ஆண்டு ஜூன் 21 முதல் 24 வரை நடைபெற்றது.

ஜப்பானின் டோக்கியோவில் "ஜப்பான்டெக்ஸ் 2022" என்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2022–ஆம் ஆண்டு அக்டோபர் 26 முதல் 28–ஆம் நாள் வரை நடைபெற்றது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் தலைமையில், அரசின் முதன்மைச் செயலாளர் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்) மற்றும் துணிநூல் ஆணையர் உள்ளிட்ட உயர்மட்ட அரசுக் குழுவானது ஜப்பான் சென்று "ஜப்பான்டெக்ஸ்–2022"–இல் பங்கேற்றனர்.

இந்தப் பயணத்தின் போது, உயர்மட்ட அரசுக்குழுவினர், ஜப்பானிய அரசாங்கத்தின் "பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை"

அமைச்சகத்தின் (METI) அலுவலர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் ஜவுளித் துறையில் முதலீடு செய்யுமாறு ஜப்பானிய தொழில்முனைவோருக்கு அழைப்பு விடுத்தனர். மேலும், அவர்கள் ஜப்பானில் உள்ள "MURATA MACHINERY LTD" என்ற முன்னனி "வீட்டு உபயோக ஜவுளி உற்பத்தி மற்றும் ஜவுளி இயந்திரங்களை" உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனத்தையும் பார்வையிட்டனர்.

இப்பயணத்தின் விளைவாக, தமிழ்நாடு அரசால் 2022 நவம்பர் 25 முதல் 26–ஆம் தேதி வரை சென்னையில் நடத்தப்பட்ட சர்வதேச தொழில்நுட்ப ஜவுளி மாநாட்டின் போது, M/s சன்வெல் சல்யூஷன்ஸ் கோ லிமிடெட், ஜப்பான் ( (M/s Sunwell solutions & co Ltd., Japan) மற்றும் தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை ஆகியவற்றிற்கிடையே, ஜவுளித் தொழிலில் ஜப்பானிய முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஜவுளிக் கண்காட்சிகளில் பங்கேற்றதன் மூலம், தமிழ்நாட்டின் துணிநூல் துறையில் புதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 5.5 துணிநூல் துறைக்கான இணையதளத்தை உருவாக்குதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 2022–23 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற கூட்டத்தொடரின் போது வெளியிட்ட அறிவிப்பின்படி, துணிநூல் துறையானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் (TNeGA) துறைக்கென தனி இணையதளம் உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாநிலத்தின் ஜவுளித் தொழிலின் தற்போதைய சூழ்நிலை, துணிநூல் துறையின் செயல்பாடுகள் மற்றும் அரசின் முன்னெடுப்புகளை தெரியப்படுத்துவதற்கு இந்த இணையதளம் உதவியாக இருக்கும்.

**6. தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையினை செறிவூட்டுதல் (Enrichment of Tamil Nadu New Integrated Textile Policy)**

தற்போதுள்ள தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையில், ஜவுளித் தொழிலுக்கான விரிவான அறிக்கைகள் மற்றும் துறை வாரியான முன்னெடுப்புகள் உள்ளன.

தொழில்நுட்ப ஜவுளிகளின் எழுச்சி, நீடித்த உற்பத்தி தேவைகள் போன்ற மாறிவரும் உலகளாவிய சூழல்களால், தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலானது புதிய சவால்களை எதிர்கொண்டுள்ளதோடு, புதிய வாய்ப்புகளையும் எதிர்நோக்கியுள்ளது.

ஜவுளித் துறையின், சமீபத்திய சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொள்ள ஜவுளி மதிப்புத் தொடரின் அனைத்து பிரிவுகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் தனிக்கவனம் செலுத்திட துணிநூல் துறையானது, புதிய ஜவுளிக் கொள்கையினை விரைவில் வெளியிடவுள்ளது.

தற்போதுள்ள ஜவுளிக் கொள்கையை செறிவூட்டுவதற்கான முதன்மை நோக்கங்கள் பின்வருமாறு:

1. தமிழ்நாட்டில் உள்ள ஜவுளித் தொழில் முனைவோருக்குத் தேவையான கொள்கை ரீதியிலான முன்னெடுப்பு, கையடக்க ஆதரவு திட்டங்களை வழங்குதல் (Handholding Support Programmes) மற்றும் ஜவுளித் துறையில் உள்ள தடைகளை நீக்குதல்.
2. தமிழ்நாட்டில் துடிப்பான மற்றும் ஒருங்கிணைந்த ஜவுளி மதிப்புத் தொடரை மேம்படுத்தி, அதன் மூலம் "2030–க்குள் நமது மாநிலத்தை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலமாக மாற்ற வேண்டும்" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு பங்களித்தல்.

இது தொடர்பாக, தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019–ஐ செறிவூட்டுவதற்கு, கைத்தறி ஆதரவுத் திட்டம் 2022–23–ன் கீழ் ரூ.23.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 7. முன்னோக்கிய பாதை (Way Forward)

தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலானது எதிர்வரும் ஆண்டுகளில் கணிசமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தை உலகளாவிய ஜவுளி மையமாக மாற்றுவதற்கு அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பின்வரும் சில பகுதிகள் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.



**நிலைத்தன்மை (Sustainability)**

உலகளவில் நிலையான ஜவுளி உற்பத்தியின் தேவை மற்றும் கவனம் அதிகரித்து வருகிறது. பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களில் இருந்து மறுசுழற்சி மூலம் இழை உற்பத்தி செய்யவும், ஜவுளிக் கழிவுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆடைகளிலிருந்து நூல் உற்பத்தி செய்வதற்கும், உற்பத்தி மற்றும் விநியோகத் தொடரில் வளங்களின் நுகர்வினை குறைக்கும் பொருட்டும் திறன்களை உருவாக்க எதிர்வரும் ஆண்டுகளில் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

**கழிவு மேலாண்மை ( Waste Management)**

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குவிந்துள்ள கழிவு உப்புகள் உட்பட, பதனிடும் தொழில்களில் கழிவு மேலாண்மை செய்வதில் தற்பொழுது பெரிய அளவிலான சவால்களை பதனிடும் பிரிவு எதிர்கொள்கிறது. "கழிவுகளிலிருந்து செல்வத்தை" (Wealth from Waste) அடைவதற்கான வாய்ப்புகள் பெரியளவில் உள்ளது. இதனால் மதிப்புத்

தொடர் வட்டத்தை (Circular Value Chain) முழுமையாக்கும் சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும். பதனிடும் போது உருவாகும் கழிவு உப்புகளிலிருந்து தொழிற்சாலைகளில் பயன்படுத்தக்கூடிய இரசாயனம் போன்ற துணை பொருட்கள் தயாரிப்புக்குச் சாத்தியமான தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட்டு அவை செயல்படுத்தப்படும்.

**டிஜிட்டல் மயமாக்கல் (Digitilisation)**

போட்டி நிறைந்த உலகச் சந்தையில், தரத்தில் சிறந்து விளங்க வேண்டுமெனில், உற்பத்தி செயல்முறையில் இயந்திரவழிக் கற்றல் (Machine Learning) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) போன்ற தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்றவை மிகவும் அவசியமாகிறது.

**இயந்திர உற்பத்தி** (Machinery Manufacturing)

அதிக மதிப்பு மிக்க, நிலைத்த பொருளாதார முன்னேற்றத்தினை செயல்படுத்த ஏதுவாக, உற்பத்திக்கான கருவிகள், இயந்திரங்கள் மற்றும்

உபகரணங்களை உற்பத்தி செய்வதில் Vertical Integration முறையில் ஒருங்கிணைத்திட வாய்ப்புகள் உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள அடிப்படை உற்பத்தி வசதிகளின் மூலம் ஜவுளி இயந்திரங்களின் உற்பத்திக்கான புதிய வழிமுறைகளைத் தழுவி, அவற்றிற்கான கண்டுபிடிப்புகள் மூலம் ஜவுளி இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளும் அதிகம் உள்ளது.

இந்தியாவில் ஜவுளித் தொழிலின் குவிமையப் பகுதியாக (Focal Point) தமிழ்நாட்டை மாற்றிட அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 8. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

தனிமனிதர்கள் மற்றும் சமூகத்தின் நல்வாழ்விற்கு மிகவும் முக்கியமாக கருதப்படும் பொருளாதார வளர்ச்சி, சமூக உள்ளடக்கம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றினை எய்துவதற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட

அமைப்பானது (UNDP) 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதற்காகப் பல்வேறு குழுக்களுடன் கூடிய செயல்திறன் மிக்க உயர்மட்ட குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

துணிநூல் துறையின் நிலையான வளர்ச்சி இலக்கான (Goal 9 Industry Innovation and Infrastructure) புதுமை முயற்சிகள் தொழில் மயமாக்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது.

நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் முக்கியமானதாக அடையாளம் காணப்பட்ட திட்டங்களை கண்காணிக்க ஏதுவாக, இத்துறை ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) நியமித்துள்ளது.

துணிநூல் துறையுடன் தொடர்புடைய நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்களை அடைவதற்கு பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத்திட்டம்**

ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டமானது, ஒன்றிய அரசினால், சுற்றுச்சூழலுக்கு உகந்த பதனிடும் நிலைகளையும் மற்றும் தொழில்நுட்பங்களையும் புகுத்தி துணிநூல் தொழில் உலக அளவில் போட்டியிட ஏதுவாக உருவாக்கப்பட்டுள்ளது. இது புதிய பதனிடும் பூங்காக்களை உருவாக்கவும், ஏற்கனவே உள்ள பதனிடும் குழுமங்களை மேம்படுத்தவும், குறிப்பாக நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மையை மேம்படுத்தவும் உதவுகிறது.

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தாலுக்கா, ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், ஒருங்கிணைந்த

பதனிடும் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டத்தின் கீழ் (IPDS and SITP) , 119 ஏக்கர் நிலத்தில் ரூ.880.00 கோடி திட்ட மதிப்பில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்கப்படும்.

**சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா**

தனியார் முதலீட்டை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஜவுளித் துறையின் வளர்ச்சிக்கு, தொழில் முனைவோர் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பூங்காவிற்கு அதிகபட்சமாக ரூ.2.50 கோடிக்கு உட்பட்டு தகுதியான திட்ட மதிப்பில் 50% நிதியுதவி வழங்கப்படுகிறது. சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் 3 உற்பத்தி நிறுவனங்களை கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

## 9.2023–2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

மாநில அரசு 2023–2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் துணிநூல் துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.1129.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023–2024 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையின் கீழ், அதிக அகலமான துணி அச்சிடும் இயந்திரத்தை வாங்குவதற்கான மூலதன மானியம் | 30.00 |
| 2 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையின் கீழ் நூற்பாலைகளில் தற்போதுள்ள கதிர்களை நவீன மயமாக்குவதற்கான வட்டி மானியங்கள் | 100.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023-2024 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 3 | செயல்படாத கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் | 0.01 |
| 4 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 973.71 |
| 5 | இதர செலவினங்கள் | 25.46 |
| | மொத்தம் | 1129.18 |

**ஆர்.காந்தி**

**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.